உ

# SOMASKANDAN

*Estd: 1931*

September 10 th 1988

# ABERAME TEXTILES

★

WHOLESALE & RETAIL TEXTILE DEALERS

FOR BEST SELECTION SAREES. SUITINGS AND

READYMADE GARMENTS

★

## ABERAME TEXTILES

அபிராமி ரெக்ஸ்ரைல்ஸ்

**248, 2nd Cross Srreet,**

(NEAR RECLAMATION ROAD)

**COLOMBO - 11**

Phone; 27520

Aum

# SOMASKANDAN

*Editors:*

S. Malavarayar

S. Visvalingam

Sri Somaskanda College

PUTTUR.

1988

## உள்ளே....


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் குழு | 3 |
| 2. | வாழ்த்துச் செய்தி | 4 |
| 3. | எங்கள் அதிபர் | |
| 4. | Editorial Notes | 6 |
| 5. | The Role of the Ombudsman | 8 |
| 6. | Science and Technology | 9 |
| 7. | சமர்ப்பணம் | 10 |
| 8. | செய்நன்றிக் கடன் | 12 |
| 9. | அதிபர் அறிக்கை | 13 |
| 10. | பரிசு பெறுபவர்கள் | 20 |
| 11. | ஞாபகார்த்தப் பரிசு | 27 |
| 12. | பாடநூல்களும் ஈழத்தின் ஆதிக்குடிகளும் | 28 |
| 13. | புலக்காட்சி மூலம் எண்ணக் கருவாக்கம் | 33 |
| 14. | அர்த்தமுள்ள சோமஸ்கந்தா | 35 |
| 15. | இளைப்பாறியோர் | |
| 16. | இன்றைய பத்திரிகைத் தமிழ் | 39 |
| 17. | பழைய மாணவர் நன்கொடை | 42 |
| 18. | எழுத்தறிவித்தவன் | 43 |
| 19. | வாழ்க நீ சோமஸ்கந்தா | 46 |
| 20. | The Animal School | 47 |
| 21. | Beautiful Butterfly | 47 |
| 22. | Staff | 48 |
| 23. | College Officers | 50 |
| 24. | Guide Company | 52 |
| 25. | In Memoriam | 52 |
| 26. | A Super Sportsman | 53 |
| 27. | Results | 54 |
| 28. | மாணவர் தலைவர் | 56 |
| 29. | சாரணர் குழு அறிக்கை | 57 |
| 30. | உயர்தர மாணவர் அறிக்கை | 58 |
| 31. | பழைய மாணர் சங்க அறிக்கை | 59 |
| 32. | ஆசிரியர் சம்மேளனம் | 61 |
| 33. | பாடசாலை அபிவிருத்திச் சபை | 62 |
| 34. | விளையாட்டுத்துறை அறிக்கை | 63 |
| 35. | நிகழ்ச்சி நிரல் | 64 |

திருச்சிற்றம்பலம்

மண்ணினல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக்கு யாதுமோர் குறைவில்லைக்
கண்ணினல் லஃதுறங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

— தேவாரம் —

திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீ சோமாஸ்கந்தன்

## சஞ்சிகை ஆசிரியர் குழு


ஆங்கிலம்

1. திரு. சு. மழவராயர்
2. திரு. ந. பாலசிங்கம்
3. திரு. ஆ. ச. செல்வநாயகம்
4. திரு. வே. பரிமேலழகபிள்ளை
5. திருமதி யோ. இராஜசேகரம்

தமிழ்

1. திரு' செ. விஸ்வலிங்கம்
2. திரு. கு. மேகநாதன்
3. திரு. மு, செல்லத்துரை
4. திருமதி ம. லோகேஸ்வரன்
5. திருமதி சி. சிதம்பரநாதன்
6. செல்வி, K. முத்துக்குமாரு

## ஆசிச் செய்தி

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி செப்டம்பர் 10, 1988 இல் நடாத்தவிருக்கும் நிறுவியவர் நினைவு நாள், பரிசளிப்பு விழா கொண்டாட்டத்தில் வெளியிடவுள்ள "சோமாஸ்கந்தன்" கல்லூரி சஞ்சிகைக்கு என் ஆசிச் செய்தியை அனுப்பி வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர் ஆகியோரின் பெருமுயற்சியால் வெளிவர உள்ள கல்லூரி சஞ்சிகை இக் காலகட்டத்தில் மாணவரின் எழுச்சிக்கும், எழுத்தாற்றல் விருத்திக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் என நம்புகிறேன். குறிப்பாக, வளர்ந்து வரும் விஞ்ஞான அறிவினை ஒரு அளவில் விளக்கும் சில கட்டுரைகள் இடம்பெறுவதை அவதானித்து மகிழ்ச்சியடைகிறேன்.

வலிகாமம் கிழக்குப் பகுதியில் இக்கல்லூரி மிக உன்னத இடத்தைப் பெற்று விளங்கியமை அக் கல்லூரியின் பழைய மாணவன் என்ற ரீதியில் நான் நன்கு அறிவேன். அறிவியலாளரையும், விஞ்ஞானிகளையும் உருவாக்கிய பெருமையும் இக் கல்லூரிக்கு உண்டு. சிறந்த கல்விமான்களை உருவாக்கிய அப்பிரதேசத்தை வளப்படுத்திய ஸ்ரீ சோமாஸ்கந்தா எதிர்காலத்திலும் ஏற்றம் பல பெற்று வாழ வளர எனது மனப்பூர்வமான நல்லாசிகளைத் தெரிவிக்கின்றேன்.

வணக்கம்

பேராசிரியர் V. K. கணேசலிங்கம்
பதில் உபவேந்தர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
20-08-1988

எங்கள் அதிபர்



நா. கணேசபிள்ளை *B. A. Dip - in - Edu. S. L. E. A. S. III*

## ஆசிச் செய்தி

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரியின் தாபகரான மழவராயர் கந்தையாவின் ஜனன தினமான செப்டம்பர் 10 இல் பரிசளிப்பு விழாவினை நடாத்தி கல்லூரிச் சஞ்சிகை ஒன்றினையும் வெளிவிடுவதாக அறிகிறேன். அத்தகையதொரு அருமுயற்சிக்கு எனது மனப்பூர்வமான நல்லாசிகளைத் தெரிவித்து ஒரு ஆசிச் செய்தி அனுப்புவதில் அகமகிழ்கின்றேன்.

புத்தூர் சோமாஸ்கந்தா தரும சாதனம் தொடர்பாக நான் பல காலும் அக்கறையுடன் ஆராய்ந்து கல்லூரித் தாபகரின் நன் நோக்கினை நன்கு விளங்கியுள்ளேன்.

சயமமும், கல்வியும் இணைந்த கற்பித்தலே மாணவரின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும், சமுதாய நலனுக்கும் பெரிதும் உதவும் என்பது கல்லூரி நிறுவியவரின் கருத்தில் நிலைத்திருந்தது.

மழவராயர் போன்ற கொடைவள்ளல்கள் நாடெங்கணும் தோன்றிப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு நிதி உதவி செய்யவேண்டும் என இச் சந்தர்ப்பத்தில் வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன்.

கல்லூரி வளம் பல பெற்று எதிர்கால சந்ததியினருக்கும் கற்பக தருவாய் நின்று பயனுதவ வேண்டுமென வாழ்த்தி என் ஆசிகளை உரைத்து நிற்கின்றேன்.

வணக்கம்

வெ. சபாநாயகம்
வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்

*கல்வித் திணைக்களம்,*
*நல்லூர்.*
*யாழ்ப்பாணம்.*
*05-09-1988*

# Editorial Notes

The year 1988 stands unique in the annals of our institution. After a long period of silence "The Somaskandan" makes its hesitant appearance. But this fact should warm the cockles of the hearts of all teachers, past pupils, parents, well - wishers as well. This magazine attempts to cover all aspects of school life and all - round progress or presumably sometimes the reverse. We hope that our alumni, parents and other well - wishers will sympathetically consider some of our difficultties and extend their co - operation and support in the years to come. A. mere "Thank You" is hardly sufficient for their past concern and interest in all the curricular and extra-eurricular activities of the school.

In the beginning of the year the school had to bid farewell to our former Principal Mr. S. R. Shanmugaratnam. He had served the school untiringly four about six years. His record of service and accomplishments cannot be easily forgotten. He had integrated himself fully with the school. He devoted all his time and energy and resources for the uplift of the school. He was highly respected for his devotion to his profession We wish him long and happy life in his retirement.

The new Cluster Principal Mr. N Ganeshapillai a former member of our staff, returned to Somaskanda from Vasavilan M. V. where he had served as a Principal for a brief period. After his arrival swift changes are taking place within the venerable walls of Somaskanda. He is a charming personality endowed with many-sided talents. Being an experienced educationist he is concerned not only with the proximate objeetives and design but also for promoting larger interests of the Institution. He is paying attention in maintaining school discipline among the students, maintaining cordial relationship among the staff and inter - relationship between parents and teachers. We wish him long period of prolific service in our institution.

### The Cluster System

We live today in an age of change, adventure, opportunity and expanding horizon. The major innovation in the school structure is the school Cluster System. It minimises the disaparties in schooling facilities The deficiencies in one school in the Cluster will be met by surplus in another school. The new system is beneficial to school community but its success depends on the efficiency of the Cluster Principal. He must be a man of tremendous ability and one gifted with a comprehensive vision like our Cluster School Principal. The Cluster School should not overshadow the schools under its wings. It must protect and preserve respective identity of the different schools.

### Aim of Education

When defining Education Dr. Sarvapillai Radhakrishnan says "Education is the Eternal Prayer, School is the Temple of Learning" Education is an investment with the

fervent hope of securing employment and advancement in the society. Education will change the economic character of our society. A nation is built in its educational institutions. We have to train our youth in them. We have to impart to them not only the pastness of the past but of its presence. The importance of Education lies not only in knowledge and skill but in being an an instrument of socialization. " Moral qualities are of greater value than intellectual accomplishments. "

Education is in a sense conterminous with life. Different societies have different histories and traditions and hence the first step in education must be to accept differences within and among societies. Elementary and secondary education must prepare the the citizen to discharge his responsibility to himself and his community Inspite free education from the kindergarten to the university from 1944 onwards, one wonders whether democracy is a living force in Sri Lanka.

**Contribution of Articles**

We wish to thank Prof. V. K. Ganeshalingam, Acting Chancellor an alumnus of the school, inspite of his crowded programmes and engagements for having accepted our request to be the Chief Guest. He has keen interest in the progress of the school. He has sent his special message on the publication of this magazine.

We wish to thank Mr. V. Sabanayagam D. E. Jaffna for having sent us message and we look forward to his presence on the Prize - Day.

Mr. T. Maniccavasagar, Retired D. E. Jaffna has contributed an article on " Traditions and Achievements of Somaskanda. " He is always helpful for the advancement of our school. We thank him for having sent us this valuable article.

Mr. P. Pushparatnam, an old boy of this school has given us lectures on various occassions. He has contributed an article on " Texts and Education of Ancient inhabitants. "

Our thanks are also due to Mr. P. Sivanantha Sarma for his contribution of an article " Thought One and Told Another. "

We wish to express our thanks to all the colleges which sent us magazinies and miscellanies.

> " The learning which a man has
> acquired in one birth,
> will yield him pleasure during
> the seven births "

From the Epigrammatic sayings of
Thiruvalluvar.

# The role of the Ombudsman

The institution of "Ombudsman" was first created by the Swedish Constitution in 1809. It is often described as "The Watch for the People". The Ombudsman system prevails in Sweden, Denmark, Norway, Guyana, the United Kingdom and New Zealand. France, Canada and in several states in U. S. A. "Ombud" reffers to a person who acts as a spoksman or representative of another person. The Ombudsman carries out investigations in private. The persons concerned are given a hearing before an adverse report is made.

As Donald C. Rowat states the use of the welfare state in the modern world has resulted in a rapid and bewildering growth of bureaucracies. It has made necessary new protections against bungling and abuse of power. Rowat is an international authority on the Ombudsman which he considers it as a uniquely appropriate institution for dealing with the average citizen's complaints about unfair administrative actions.

The office of Parliamentary Commissioner or Ombudsman which is provided for by Articles 156 of the constitution has now been created by Act No. 17 of 1981. Sri Lanka's Ombudsman is highly independent. He is appointed by the President for specified period. He is impartial in his work. As Rowat emphasises the Ombudsman's method of handling appeals against administrative decision is unlike that of the courts- direct, informal, speedy and cheap. The institution admirably serves the needs of the ordinary citizen.

The Swedish Ombudsman continues to be the prototype for most of these institutions with variations to suit local conditions. The Ombudsman will create a new relation of confidence between administrator and members of the public The Ombudsman will automatically promote high standards of administration and be the people's guarantee of fair and honest administration under the law. Sri Lanka's Ombudsman is headed by an independent high level public official who is responsible to the legislature. He must create a tradition so that aggrieved persons could approach it with a feeling of confidence. Impartiality, sympathy courtesy are his qualities with which he would enhance the high ideals of this useful institution. The ordinary citizen is generally poor and is not conscious of his legal rights Though a legal remedy is available the aggrieved parties are unable to go before a court of law owing to high costs. Under these circumstances the function of the Ombudsman is very important. Sri Lanka is a multi-religious, multiracial and multilingual society The administrative justices could be severely felt by these divisions and differences.

The office can be established in any area for the protection of human rights and fundamental freedoms. There was a proposal during U N. Assembly debates for the establishment of an international office for Ombudsman.

Pericles, one of the greatest leaders of Greek Democracy observed "In a Democracy equal justice is secured for all and justice, liberty and tolerance are the ideals of the people".

**T. Gopalakrishnan** Year 13A & C Com.

'Bad men live to eat and drink whereas good men eat and drink in order to live'

*— Socrates*

# Science and Technology to Development

"Science is the shared heritage of mankind". The reason why developing countries are lagging today in science and technology is their neglect of basic sciences How can we in the developing world turn the pages of history and take up a rightful place in sciences? For example how could the Philippines with about the same population as France and U. K rival these two countries in production and scientific creativity?

The youth has to be encouraged and educated by the government to take up this challenge of acquiring scientific knowledge. It must impart hard scientific training to more than half of its manpower. A Nation must pursue basic and applied sciences with 1 — 2 percent of its GNP spent on research and development and at least one – quarter of it on pure science alone. The basic sciences in the school and university curriculam in Japan are today the envy of the whole world. Today the USSR has a self governing community of one million scientists in its institutes. The priorities and privileges accorded to them in the Soviet Union are the envy of other nations.

In developing countries there is the isolation of scientific effort from world science. An International Centre for Theoretical Physics in Trieste was created under the patronage of U. N. O One of the aim is to transfer scientfic knowledge from advanced countries to developing countries. There are about 22 — 25 International Centres for Science all over the world.

Science and Technology is the backbone of all industrial and agricultural development The development of science and technology comes directly under presidential control. All scientific progress is constantly reviewed by Congress men in U. S. A. Correct science policy formulation is vital for national development. Today there is much frustration among the scientific community due to lack of job satisfaction. A large number of qualified scientists who ought to be engaged in scientific research are doing routine administrative duties instead. This is a great loss for our country. Some of them are leaving for other countries where there are greater opportunities for scientfic research and better pay prospects. There are no incentives to stop this "Brain Drain".

The National Science Council is an important state body It is granting some research grants and arranging conferences The Scientific Research and Technology should be expanded. Today in Sri Lanka it has become necessary more than ever to harness all available scientific and technical personnel and to maximise the utilization of available resources to meet the challenge of the nation. Under the direction of Arther Clarke's space, scientific, technological advices and computer studies Sri Lanka can advance tremendously in these fields. Arther Clarke is an architect of an ultra-modern society based on space research and computer engineering. He is the forecaster of the twenty-first century's life of mankind.

"Third world space technology is more needed than the developed world"

— *Arther Clarke*

T **Arulmathy** Year 12 B Science

"All the world's a stage, and all the men and women merely players. They have their exits and their entrances. And one man in his time plays many parts".

*Shakespeare's 'As you like it'*

# சமர்ப்பணம்

1988 செப். திங்கள் 10 ஆம் நாள் பாடசாலை வரலாற்றிலே ஒரு பொன்னுள் இந்நன்நாளில் நீண்ட நாட்களுக்குப் பின் சோமஸ்கந்தன் சஞ்சிகை மீண்டும் உங்கள் கைகளில் தவழ்கிறது.

ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி நீண்ட பாரம்பரிய வரலாறுடையது. நாவலர் வழிவந்த சைவப் பாரம்பரியத்தின் நிலைக்கலனாக அமைந்தது. சார்நிகர் கொடை வள்ளல் அமரர் மளவராயர் கந்தையாவின் செல்வக் குழந்தை எங்கள் சோமஸ் கந்தா. இன்று 57 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து 60 ஆண்டு வைர விழாவை நோக்கி வெற்றிநடைபோட்டு முன்னேறுகிறது. இலங்கையின் முதன் முதல் அமைந்த இலவசக் கல்லூரி என்ற பெருமையுடையது. 1945 ஆம் ஆண்டிலேயே முதன் முதல் இலவசக் கல்வி இலங்கை முழுவதிலும் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் 1931 இலேயே அமரர் மளவராயர் கந்தையாவின் சோமஸ்கந்த வித்தியாலயத்தில் படித்த மாண வர்கள் இலவசக் கல்வியைப் பெற்றுக்கொண்டார்கள்.

சோமஸ்க்கந்தாவின் பெயரை உச்சரிக்கும் பழைய மாணவர்கள் அதன் புகழ் பூத்த அதிபர்கள் அமரர் வீரசிங்கம், அமரர் குமாரசாமி நாமங்களை உச்சரியாமல் விடமாட்டார்கள். மனித தெய்வங்களான அவ்விருவரும் ஆற்றிய மகத்தான சேவை காலத்தால் அழியாதது. கல்லூரி வரலாற்றில் ஒளி பொருந்திய பக்கங்களில் அவர்கள் நாமம் நின்று நிலவும். எமது பழைய ஆசிரியர்களை நினைத்துப் பார்க்கும் போது கல்லூரி வரலாற்றைப் பின்நோக்கிப் பார்க்கும்போது தாரகை நடுவண் தண்மதி போன்று அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாண்டு மாசித் திங்கள் 10 ஆம் நாள் வரை எமது அதிபராக இருந்து இளைப்பாறியவர் திரு இரா. சண்முகரத்தினம் அவர் அமரர் குமாரசாமி அதிபர் காலத்து விடுதிப் பொறுப்பதிகாரியாகவும் உயர் வகுப்பு மாணவர் மன்றப் பொறுப் பாசிரியராகவும் இருந்து நற்பணியாற்றியமை பழைய மாணவர்கள் நன்கு அறிந்ததே. கடந்த ஐந்தாண்டுகளாக அதிபராக இருந்து தன்னால் இயன்றவரை நற்பணியாற்றி ஆசிரியர்களுடன் இன்முகம் காட்டி ஒரே குடும்பமாக ஒற்றுமையுடன் செயற்பட வைத்த பெரியாராவர். அவருடைய ஓய்வு காலத்தில் எல்லா நலனும் பெற்று இன்ப முடன் அவர் வாழ வல்லான் சோமஸ்க்கந்தன் இன்னருள் புரியட்டும்.

இவ்வருடம் பங்குனித் திங்கள் 2 ஆம் நாளிலிருந்து புதிய அதிபர் திரு. நா. கணேசபிள்ளை எமது கொத்தணி அதிபராகப் பொறுப்பேற்றுள்ளார். திரு. கனக சபாபதி அதிபர் காலத்து இங்கு கடமையாற்றி மிகச் சிறந்த ஒரு ஆசிரியராக புகழ் பூத்தவர். பதவி உயர்வு பெற்று அதிபராகி வசாவிழான் கொத்தணி அதிபராக இருந்து இங்கு இடமாற்றலாகி வந்தது எமது நற்பயனே. இளமைத் துடிப்பும் ஊக்க மும் நற்குணங்கள் நிறைந்த புதிய அதிபர் தலைமையில் மீண்டும் பாடசாலை ஒளி மயமான எதிர்காலத்தைப் பெற எம்பெருமானாகிய சோமஸ்கந்தர் அருள் புரியட்டும்! கை மேல் பலன் என்பார்கள். சோமஸ்க்கந்தன் சஞ்சிகையை சோமஸ்கந்தன் அரு ளால் தூண்டப்பட்ட அதிபரின் அயரா முயற்சி என்றுதான் கூறவேண்டும்.

சோமஸ்கந்தன் சஞ்சிகை மீண்டும் மலர்வதற்கு ஆசிச் செய்தி அனுப்பிய யாழ்ப் பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் அவர்கள் தமது நெருக்க மான வேலைகளுக்கு மத்தியில் எமது மலரை இட்டு சிந்தித்து எழுதி அனுப்பியமைக் கும் பிரதம விருந்தினராக வருகைதர சம்மதித்தமைக்கும் எமது நன்றிக்கடன் உரித் தாகும். எமது கல்லூரியில் அவர் ஒரு காலத்தில் கல்வி கற்றவர் என்பதை அறிகின்ற எமது மாணவர் குழாம் புதிய உற்சாகம் அடையட்டும். அவரைப் போன்று வாழ்வில் உயர்வுகள் பெறட்டும்.

யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் எமது கல்லூரி மீது வைத்திருக்கும் அபிமானத்தை அவரது ஆசிச் செய்தி காட்டுகின்றது. தனது பல்வேறுபட்ட கடமைகட்கு மத்தியில் எங்கள் கல்லூரி மலருக்கு ஆசிச் செய்தி அனுப் பியமைக்கும் சிறப்பு விருந்தினராக விழாவில் கலந்துகொள்வதற்கும் எமது நன்றி உரித்தாகும்.

சோமஸ்கந்தன் சஞ்சிகை வெளியாகியுள்ள கட்டுரைகளை அளித்த பெரியோர் களில், முன்னாள் வட மாநில கல்விப் பணிப்பாளரும் எமது அறங்காவலர் சபை முகாமை யாளரும் ஆகிய திரு. இ. மாணிக்கவாசகருக்கு முதற்கண் நன்றி உரித்தாகும். '' அர்த்தமுள்ள சோமஸ்கந்தன் '' என்ற தலையங்கத்தில் பல தத்துவ சமய விடயங் களையும் எமது வாழ்க்கை அனுபவங்களையும் சோமஸ்கந்தன் சாதனைகளையும் இணைத் துத் தந்துள்ளார்.

எமது பழைய மாணவரும் யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரை யாளருமாகிய திரு. பரமு புஸ்பரத்தினம் பாடநூல்களும் ஈழத்தின் ஆதிக்குடிகளும் பற்றி எழுதியுள்ளார் நாம் அழைத்தபோதெல்லாம் கல்லூரிக்கு வந்து கனிவுடன் உதவும் அவருக்கு நன்றி. அவரைப்போல எமது மாணவர்கள் வாழ்வில் முன்னேறி கல்லூரியை மறவாது செயற்பட வேண்டும்.

புகழ்பெற்ற எழுத்தாளர் கோப்பாய் சிவம் எமது பழைய மாணவர். சொல்ல வந்தது ஒன்று சொல்லி முடித்தது வேறொன்று என்னும் உரையாக்கத்தைத் தந்துள் ளார். அவர்க்கும் எமது நன்றி.

சோமஸ்கந்தன் சஞ்சிகைக்கு கட்டுரைகள், கவிதைகள் தந்த ஆசிரியர்கள், மாண வர்கள் அனைவருக்கும் நன்றி கூறி சோமஸ்கந்தன் அருளால் வெளிவந்த இம் மலரை அவன் அருளாலே அவன்தாள் வணங்கி சோமஸ்கந்த அபிமானிகளுக்கு சமர்ப் பணம் செய்கின்றோம்.

வணக்கம்

# செய்நன்றிக் கடன்

ஸ்ரீ சோமாஸ்கந்தப் பெருமானின் சேவடிகளைப் போற்றி ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி முதல்வராக வந்திருக்கும் விக்கினம் தீர்க்கும் விநாயகன் நாமம் பொருந்திய தலைவர் அவர்களே எமது பிரதம விருந்தினரான பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கணேசலிங்கம் அவர்களே! நல்உதவி புரியும் பெற்றோர்களே, கல்விப்பயிர் வளர்க்கும் ஆசிரியர்களே! நலன் விரும்பிகளே! பழைய மாணவர்களே! எனது சகோதர மாணவ மணிகளே! தங்கள் அனைவர்க்கும் வணக்கம்!

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய் நன்றி கொன்ற மகற்கு'' என்பது தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனாரின் குறள் அமுதமாகும். செய்நன்றி அறிந்து ஒழுகுதலை சிறந்த அறமாமாகப் போற்றி வருவது நம் தமிழ்நாடு! காலத்தினாற் செய்த நன்றி சிறிதாயினும் அது ஞாலத்தில் மாணப் பெரிது என்றும் நினைத்து நன்றி செய்யினும் படைத்துணையாகக் கொள்வர் என்றும் அறநூல்கள் நன்றாயின் பொருமாள் நயம்பட எடுத்துக் கூறுகின்றன. 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்றும் உண்ட விட்டுக்கு இரண்டகம் செய்தல் ஆகாதென்றும் நம்நாட்டில் வழங்கிவரும் பழமொழிகள் செய்நன்றியறிதல் என்னும் செம்மை சான்ற நல்லறத்தை எடுத்து விளக்குகின்றன.

இன்றைய நன்னாள் செப்டம்பர் 10 எமது தாபர் அமரர் மழவராயர் கந்தையா பிறந்த பொன்னாள். கார் நிகர் கொடையினரான மழவராயர் கந்தையா காலமறிந்து செய்த மழைபோல 1931 ம் ஆண்டில் எமது பாடசாலையைத் தொடக்கி வைத்தார். அது ஆல்போலத் தழைத்து அறுகு போல வேரூன்றி ஐம்பத்தேழு ஆண்டுகளைக் கடந்து அரிய பல அளப்பரும் கல்விப் பணிகளை ஆற்றி வந்தது. ஆற்றி வரும் புகழ்பூத்த புத்தூர் கிராமத்திலும் அதன் அயற் கிராமங்களிலும் மக்களின் வாழ்வில் ஏற்பட்ட சமுதாய பொருளாதார மாற்றங்கட்கும் இக் கல்விக் கூடமே கால்கோளாக அமைந்தது. இத்தகைய அரும்பணியாற்றிய எமது கல்விக்கூடத்தினை நிறுவிய தாபகர் தினத்தைக் கொண்டாடி செய்நன்றி பாராட்டும் பணியே நம் அனைவரினதும் தலையாய பணியாகும்.

எமது அழைப்பை ஏற்று தாபகரின் தினத்தைக் கொண்டாடவும் பரிசளிப்பு விழாவில் கலந்து சிறப்பிக்கவும் பெருயக்களை மாணவர் சார்பில் வரவேற்கவேண்டியது என் பணியாகும். இவ் விழா இனிது நிறைவேறும்படி மூலகாரணமாக நின்றுத் துணையாய் அருள் செய்யும் சோமாஸ்கந்தப் பெருமானை திரிகரண சுத்தியோடு பணிந்து அவர் திருவருளையே முதலில் வருக, வருக நலமே தருக, தருக என வரவேற்று என் வரவேற்புரையை ஆரம்பிக்கிறேன்.

எமது அழைப்பை ஏற்று தமது பல்வேறு கடமைகட்கிடையே இன்றைய பொழுதை எங்களுடன் பகிர வந்துள்ள யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் க. கணேசலிங்கத்தையும் அவரின் பாரியாரையும் வருக, வருக என இருகை கூப்பி மாணவர்கள் சார்பில் அக மகிழ்வுடன் வரவேற்கிறோம். அவர் எமது கல்லூரியின் பழைய மாணவர். அவரைப் பழைய மாணவர் என்று அறியும்போது எமது உள்ளத்தில் புத்துணர்வு பொங்கி வழிகிறது.

எமது கல்வி இலாகாவின் யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளராயிருந்து மாணவர் நலனுக்காக அல்லும் பகலும் அயராது உழைத்து மாணவர் சோதனையை வெற்றி

சரமாக நடாத்தி சாதனை ஈட்டிய திரு. சபாநாயகரையும் வருக, வருக என வர வேற்கிறோம்.

எமது கல்லூரியின் வளர்ச்சியில் அக் கறை கொண்ட பழைய மாணவர்களையும் நலன்விரும்பிகளையும் பெற்றோர், ஆசிரியர் களையும் வரவேற்பதில் மாணவராகிய நாம் மகிழ்ச்சியடைகின்றோம். அமரர் கந்தையா வள்ளல் ஆரம்பித்த இக் கல்லூரி புத்தூ ரின் கற்பகதருவாக நின்று பயனுடைய தாக வர நீங்கள் அக்கறையோடு அளித் துவரும் நிதியுதவிகளே எங்கள் நலன்களை சிறப்புறப் பேணி வருகின்றன. அரசாங்கத் தின் உதவியற்ற அநாதரவான இன்றைய சூழ்நிலையில், நீங்கள் இந்நாட்டு மன்னராய் புலவரவலராய் எல்லாம் ஆதரித்துக் காத்து வருவதனுற்தான் எமது பணிகள் பல நிறை வேறி வருகின்றன எனவே உங்களின் மிகுந்த நன்றியறிதலோடு கரம்கூப்பி சிரந் தாழ்த்தி வாழ்த்தி வருக! வருக இன்னும் உதவி தருக! தருக! என அகமகிழ்வுடன் வரவேற்கிறோம். அனைவரையும் வருக! வருக என வரவேற்று எனது வரவேற்பு உரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்

# அதிபர் அறிக்கை

பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் கணே சலிங்கம் அவர்களே, யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளராக இருந்து அரும் பெரும் சேவையாற்றிவரும் திரு. வெ. சபாநாயகம் அவர்களே, அவர்தம் பாரியார் அவர்களே ஆசிரியர்களே, மாணவர்களே பழைய மாணவர்களே பெற்றோர்களே உங்கள் யாவர்க்கும் எனது அன்பான வணக்கம்.

இன்றைய விழாவிற்கு வருகைதந்துள்ள உங்கள் எல்லோரையும் வருக வருக எனக் கூறி வரவேற்பதில் புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் அனை வரும் பெரும் மகிழ்ச்சியடைகின்றார்கள்.

இன்றைய சூழ்நிலையில் ஒரு கொத் தணிப்பாடசாலை அதிபர் என்ற வகையில் பெரும் பொறுப்புக்களையும், கடமைகளையும் நிறைவேற்ற வேண்டியவனுக உள்ளேன். கொத்தணியின் தலைமைப்பாடசாலை ஆகிய புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் ஸ்தாபகர் ஜனன தினம் செப்டம்பர் 10 ஆகும் அன்றைய தினம் அப் பெருவள்ள லாகிய மழவராயர் கந்தையாவை நினைவு கூர்ந்து மாணவர்களை மேலும் ஊக்குவித்தற் பொருட்டு பரிசளிப்பு விழாவை ஏற்பாடு செய்துள்ளோம்.

இன்றைய தினம் எம்மத்தியில் சமூக மளித்துநிறுவியவர் நினைவுப் பேருரை வழங்க பேராசிரியர் கணேசலிங்கம் அவர்கள் இணங்கியுள்ளார்கள் யாழ்ப்பாணப் பல் கலைக் கழகத்தின் பதில் உப வேந்தராகவும் கடமையாற்றி கற்றோரவையின் பெருமைக் கும் மதிப்பிற்குமுரியவராக விளங்குகின்றார். அவர் எமது கல்லூரிப் பழைய மாணவன் என்பதைக் கூறிக்கொள்வதில் நாம் பெரு மையும், மகிழ்ச்சியும் அடைகின்றோம். எமது யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளர் எமது கல்லூரியோடு நெருங்கிய தொடர் புடையவர் அறவள்ளல் மழவராயர் கந்தை யாவின் தருமசாதனம் பற்றி ஆராய்ந்து பல ஆக்கபூர்வமான முன்னேற்றங்களைச் செய்வதற்கு எமக்கு உதவிவருகின்றார்.

சமர்ப்பணம்

— நல்லைநகர் ஆறுமுகநாவலர் வழியிலே சைவமும் தமிழும் தழைத்தோங்க புத்தூர்

பிரதேசம் செய்த புண்ணிய பயனாக அவதரித்தவர் கார்திகர் கொடை வள்ளல் மழவராயர் கந்தையா இக்கல்லூரியைமட்டுமன்றி அன்னசத்திரம், அறநிலையமும் அமைத்து அவை சிறப்புற இயங்க தம் உடல், பொருள், ஆவி அத்தனையையும் வழங்கினர். இலங்கையின் முதன்முதலான இலவச என்ற பெருமையையும் எமது அப்போதைய ஸ்ரீ சோமாஸ்கந்த வித்தியாலயம் பெற்றது. சமயமும், கல்வியும் இணைந்துகற்பிக்கப்படவேண்டும்என்றதனது இலட்சியத்தைச் செயற்படுத்துவதற்காகச் சோமாஸ்கந்த ஆலயத்தையும் கல்லூரியின் ஒரு பகுதியில் நிறுவினர். அப்பெரு வள்ளலார் பிறந்த செப்டம்பர் 10ஆம் நாளை நினைவு கூர்ந்து இன்றைய விழாவையும இவ்வறிக்கையையும் அன்னருக்கே அர்ப்பணிக்கின்றோம்.

மாணவர் தொகை;

இப்பொழுது எமது கல்லூரியில் 1737 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்' இத்தொகையின் விபரம் பின்வருமாறு.

| | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| க. பொ. த. உயர்தரம் | 56 | 48 | 104 |
| க. பொ. த. சாதாரணம் | 87 | 68 | 155 |
| கனிஸ்ட பிரிவு (ஆண்டு 6—10) | 405 | 363 | 768 |
| பிரதம பிரிவு | 353 | 357 | 710 |
| மொத்தம் | 901 | 836 | 1737 |

ஆசிரியர் குழாம்

எமது பாடசாலையில் தற்போது 53 ஆசிரியர்களும், வசதிக் கட்டணத்தில் சம்பளம் பெறும் ஆசிரியர்கள் 08 பேரும் உளர். 10-02-88 வரை திரு. சு. இ. சண்முகரத்தினம் அதிபராகக் கடமை புரிந்து இளைப்பாறியுள்ளார். 01-03-88ல் புதிய அதிபர் பதவியேற்றார். 16-08-88ல் திரு. கா. விஞசித்தம்பி இளைப்பாறியுள்ளார். எமது பாடசாலையில் 25 வருடகாலமாக உடற்பயிற்சி ஆசிரியராகவிருந்த திரு. க. தங்கராசா அவர்கள் எதிர்வரும் நவம்பர் மாதத்துடன் இளைப்பாறவுள்ளார். ஆசிரியர்களின் நலன்களைக் கவனிக்கவும், நிர்வாகத்திற்கு உதவவும் ஸ்ரீ சோமாஸ்கந்த ஆசிரியர் சம்மேளனம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் தலைவராக திரு. மு. செல்லத்துரையும், செயலாளராக திரு. அ. அருந்தவநேசனும், பொருளாளராக திரு வே. சண்முகலிங்கமும் கடமையாற்றுகிறார்கள் இவர்கட்கு எனது பாராட்டுதலைத் தெரிவிப்பதோடு ஒருமுகப்பட்டு கல்லூரி வளர்ச்சி கருதி என்னுடன் ஒத்துழைக்கும் ஆசிரியர் கழக உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

ஆரம்ப பிரிவு

ஆசிரியர் தொகை
பயிற்றப்பட்டோர் 12
வசதிக் கட்டண ஆசிரியர் 08

பாலர் பகுதி ஆரம்ப பகுதி வகுப்புக்களைக் கவனிக்க போதிய ஆரம்ப பிரிவு ஆசிரியர்கள் (பயிற்றப்பட்டோர்) இல்லாதது பெருங்குறையாகும். வருடாவருடம் இளைப்பாறிச் சென்ற ஆசிரியர்களின் இடத்திற்கு எமக்கு புதிய பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் தரப்படவில்லை. இக்குறையை எமது மாவட்டக் கல்விப்பணிப்பாளர் அவர்கள் உடனடியாகக் கவனிப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம். 5ம், 6ம் வருட

வகுப்புக்களின் புலமைப் பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்த மேலதிக வகுப்புக்களை விடுமுறைக் காலத்தில் நடாத்திய ஆசிரியர்கள் திரு. மு. சி. சிதம்பரநாதன், திரு. கா. சிவசுப்பிரமணியம், திரு ஆ. சி. கந்தசாமி, திரு. ச. சிவசம்பு, திரு. செ. மகேஸ்வரன் ஆகியோருக்கும், பிரதம பகுதிப் பொறுப்பாசிரியர் திரு. செ. சின்னத்தம்பி அவர்கட்கும், உதவிச் சிரேஸ்ட ஆசிரியர்கள் திரு. வ. தியாகராசா, திரு. கா. விஜேசித்தம்பி ஆகியோருக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பரீட்சைப் பெறுபேறு

கடந்த வருடம் 1987 மார்கழி மாதம் நடைபெறவேண்டிய பரீட்சை சென்ற யூலாய் மாதத்தில் நடைபெற்றது. இவர்களுக்குரிய பரீட்சை முடிவுகள் இதுவரை வெளி வரவில்லை. மொத்தம் 170 பேர் தோற்றினர்.

1986 டிசம்பரில் நடைபெற்ற க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு மொத்தம் 132 பேர் தோற்றினர். இவர்களில் 34 பேர் சித்தியடைந்தனர். க. பொ. த. உயர்தர விஞ்ஞானப் பிரிவுக்கு 15 பேரும், கலை வர்த்தகப் பிரிவுகளில் 19 பேரும் படிப்பதற்கு தகைமை பெற்றுள்ளனர். சென்ற வருட ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற க பொ. த. உயர்தர பரீட்சைக்கு 15 பேர் தோற்றினர் இவர்களில் இருவர் மூன்று பாடங்களில் மூவர் நான்கு பாடங்களிலும் சித்தியெய்தினர். இவர்களுள் மூவர் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றனர். 1986 ஆகஸ்டில் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் 24 பேர் தோற்றினர். இவர்களில் இருவர் மூன்று பாடங்களிலும், இருவர் நான்கு பாடங்களிலும் சித்தியடைந்தனர், இவர்களுள் இருவர் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றனர்.

சென்ற வருடம் நடைபெற்ற சைவ பரிபாலன சபைப் பரீட்சையில் எமது மாணவர்கள் சிறப்புச் சித்தியடைந்துள்ளனர். சமய பாடப்பரீட்சையில் அக்கறை காட்டி வரும் ஆசிரியர் திரு. மு. செல்லத்துரை, திருமதி சி. சிதம்பரநாதன், திருமதி யோ. புண்ணியமூர்த்தி ஆயோருக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

விளையாட்டுத்துறை

இவ்வாண்டு இல்ல விளையாட்டுப் போட்டி 23-3-88 திகதி எமது இளைப்பாறிய அதிபர் திரு. சு. இ. சண்முகரத்தினம் அவர்களை பிரதம விருந்தினராகக் கொண்டு வெகு சிறப்பாக நடைபெற்றது. கந்தையா இல்லம் 744 புள்ளிகளைக் பெற்று முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது. அணிநடையில் கந்தையா இல்லம் முதலிடத்தைப்பெற்றது. 28-6-1988திகதி கோத்தணி ரீதியிலான வட்டாரப்போட்டி இடம் பெற்றது. விளையாட்டு நிகழ்ச்சிகளில் மாணவர்கள் ஊக்கத்துடன் செயற்பட வழிகாட்டிவரும் ஆசிரியர் திரு. சு. தங்கராசா அவர்களும் அவருக்கு உதவியாகச் செயற்பட்ட ஆசிரியர்கள் திரு. வ. ஆறுமுகம், திரு ச. தருமலிங்கம், திரு அ. அருந்தவநேசன், திரு க. சாம்பமூர்த்தி, திருமதி எல் எம் எல். மேர்வின், திருமதி வை. புண்ணியமூர்த்தி, செல்வி கி. முத்துக்குமாரு ஆகியோருக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

நூலகம்

எமது நூலகம் அரும்பெரும் பொக்கிசமான அறிவு நூல்களையும், கலைக்களஞ்சியங்களையும், கொண்டுள்ளதெனினும் பல காலமாக நல்லமுறையிலியங்கவில்லை தனது காரியாலய வேலைகளுடன் திரு கா. தாமோதரம்பிள்ளை மேலதிகமாக நூலகப்பொறுப்பாளர் பதவியை இதுவரை செய்து வந்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தற்போது செல்வி வசந்தா நல்லதம்பி நூல்நிலையப் பொறுப்பாளராக வசதிக் கட்டணத்தில் நியமனம் பெற்றுள்ளார். நூல்நிலையததை நவீனப்படுத்தி நல்ல முறையில் இயங்கவைக்க திரு. செ. விசுவலிங்கம், திரு செ. தம்பையா, திருமதி

எல். எம். எல். மேர்வின், செல்வி கி. முத்துக்குமாரு ஆகியோரைக் கொண்ட குழுவை நியமித்துள்ளோம். அக்குழுவினர் திறம்படச் செயற்பட்டு நூல்நிலையத்தை மாணவருக்குப் பயன்படும் வகையில் புதுப் பொலிவடையச் செய்யவேண்டுமென எதிர் பார்க்கின்றோம்.

### கழகங்கள்

க.பொ.த. உயர்தர மாணவர் மன்றம் மிகவும் உயிர்த்துடிப்புள்ள மன்றமாக பிரதி வியாழக்கிழமை தோறும் 8ம் பாடவேளை கூடுகின்றது. இவ்வருடம் 07-08-88 இல் வருடாந்த மதிய போசன விருந்து நடை பெற்றது முதன்மை விருந்தினராக பிரதம கல்வி அதிகாரி திரு. கே. கந்தசாமி அவர்கள் கலந்துகொண்டார்கள். கல்லூரிப் பழைய மாணவரான திரு. சி. சிவ்நேசன் சட்டத்தரணி அவர்கள் கலந்துகொண்டார்கள். உயர் வகுப்பு மாணவர் மன்றத்தின் காப்பாளராகிய ஆசிரியர்கள் திரு. செ. விசுவலிங்கம், திரு. வி. எஸ். கந்தசாமி, திருமதி ஐ. பாலச்சந்திரன், திருமதி எல். எம். எல். மேர்வின் ஆகியோர் மாணவர்களுக்கு நல்வழிகாட்டி வருகின்றனர். இவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். பாடசாலையின் சமய நிகழ்ச்சிகளையும் விழாக்களையும் சைவ மன்றமும், கலா மன்றமும் இணைந்து சிறப்புற நடாத்தி வருகின்றன. நவராத்திரி விழாக் கலைநிகழ்சசிகள், அத்திவாரத்தினம், வித்தியாரம்ப தினம், தாபகர் தினம் முதலியன சைவப் பாரம்பரியங்களோடு முத்தமிழ் விழாக்களாக நடைபெற உதவி வரும் ஆசிரியர் குழாமுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பாக கலாமன்றச் செயலாளர் திருமதி ம லோகேஸ்வரன், திரு. செ. விசுவலிங்கம் திரு. க. சாம்பமூர்த்தி, சங்கீத ஆசிரியர் திரு. வி. சுந்தரலிங்கம், திரு, கா. விஞசித்தம்பி ஆகியோருக்கு நன்றி கூறுகின்றோம்.

இவ்வருடம் 26-06-88 திகதியில் பாடசாலை அபிவிருத்திச் சபை பொதுக் கூட்டம் நடைபெற்றது. மொத்தம் 140 பேர் அபிவிருத்திச் சபையில் அங்கத்தவர்களாகச் சேர்ந்துகொண்டனர். திருத்த வேலைகள் பலவற்றை மேற்கொண்டு கல்லூரி நிர்வாகத்திற்கு உதவிவருகிறது. மாணவர்களுக்குப் பயன்படும் தளபாடங்கள் பல செய்யப் பட்டுள்ளன. பிரதான கட்டிடத்தில் திருந்த வேலைகளுக்காக ரூபா 50/- ஒவ்வொரு மாணவரிடமும் அறவிடுவதெனவும் சென்ற பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அரசாங்கம் திருத்த வேலைகளுக்கு உதவாத அநாதரவான சூழ்நிலையில் கல்லூரி மண்டபத்தின் அவசிய வேலைகளை மேற்கொள்ளவும், வெள்ளை பூசவும் அவர்கள் முன்வந்தமையைப் பாராட்டாமல் இருக்க முடியாது. சென்ற ஆண்டில் திருத்த வேலைகளுக்கு ரூபா 18000/- தளபாடத்திற்கு

ரூபா ............ செலவிடப்பட்டது பாடசாலை அபிவிருத்திச்சபை செயலாளர் திரு அ நாகேஸ்வரனுக்கும் முன்னைய பொருளாளர் திரு கா. விஞசித்தம்பிக்கும் தற்போதைய பொருளாளர் திரு க. சுப்பிரமணியத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### பழைய மாணவர் மன்றம்

இவ்வருடம் 14 04.1988 திகதியில் எமது பழைய மானவர் சங்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. 110 பேர் அங்கத்தவராகச் சேர்ந்து கொண்டனர். பழைய மாணவர் சங்கத்தின் அங்கத்தவர்களில் கிராமசேவையாளர்கள் 10 பேர், வேறு சிலரும் சேர்த்து 10000/- ரூபா பெறுமதியான ஒலிபெருக்கியை அன்பளிப்புச் செய்தது பாராட்டுதற்குரியது. பழைய மாணவர் சங்க இணைச்செயலாளரான, திரு. க. வைத்தியநாதன், திரு. பொ. ஜெகநாதன் ஆகியோருக்கும், ஊக்கம் காட்டி வரும் உறுப்பினர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக. பழையமாணவர் சங்கத்தினர் பாலர் வகுப்புஅறைக்கட்டிடங்களைத் திருத்தி நவீன கல்வி ஏற்பாடுகட்கமைய புதுப்பித்தும் தரமுன்வந்துள்ளமை பாராட்டப்படவேண்டியதாகும். பழைய மாணவரான திரு சி. முத்துலிங்கம் என்பவர்

ரூபா 2000/- ம் இதற்கென அன்பளிப்புச் செய்துள்ளார். மற்றும் கல்லூரியின் திறந்த வெளியரங்கைத் திருத்தி புனரமைக்க திரு சி. இராசரத்தினம் என்ற பழைய மாணவர் முன்வந்துள்ளமை பாராட்டுதற்குரியது. இதே போல் நல்ல நிலையிலுள்ள மேலும் பழைய மாணவர்கள் தாம் கற்ற கல்லூரிக்கு உதவ முன்வருவார்கள் என எதிர் பார்க் கின்றோம். ஒரு கல்லூரியின் உயர்ச்சி அதன் பழைய மாணவர்களின் அக்கறையிலும், ஆர்வத்திலும் பெரிதும் தங்கியுள்ளது. எமது பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை நாட்டு நிலைமை காரணமாக 1983க்குப்பின் செயற்படவில்லை ஆனல் இவ்வாண்டு சித் திரை மாதம் எமது கொழும்புக்கிளையைப் புனரமைத்தோம். பொறியியலாளர் திரு கே. பதுமநாதன் தலைவராகவும் திரு கே. தனபாலசிங்கம் செயலாளராகவும். திரு கே. கனகசிங்கம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். எமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் அவர்கட்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தர்மகர்த்தா சபை

எமது கல்லூரியின் தர்மகர்த்தா சபை தலைவராக பதவிவழியாககல்விப்பணிப்பாளர் இருந்து வருகிறார். அமரர் மழவராயர் கந் தையாவின் அறக்கட்டளைப்படி தாபகரால் விடப்பட்ட சொத்துக்களை இச்சபை பரி பாலித்து வருகிறது. இச்சபையினர் பாட சாலை நிர்வாகத்திற்கும், சமய விழாக்களைக் கொண்டாடுவதிலும் நிர்வாக செலவினங் களின் சில பகுதிகளை தருவதிலும் காட்டி வரும் ஒத்துழைப்புக்கு நாங்கள் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். தர்ம கர்த்தா சபையின் தலைவராக இருந்து இட மாற்றலாகிச் சென்ற முன்னாள் கல்விப்பணிப் பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் அவர்கள் எமது அறக்கட்டளையிற் குறிக்கப்பட்ட காணிகளில் வருமானத்தை அதிகரிக்கவும் கட்டிட வாடகையை கூட்டவும் நடவடி க்கை எடுத்து ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எமது தற் போதைய கல்விப்பணிப்பாளர் திருவெ. சபாநாயகம் இது தொடர்பாக ஏற்கனவே அறிந்து ஆராய்ந்துள்ளார்கள். ஆதலால் மேலும் ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற் கொண்டு தர்மகர்த்தா சபைக்குரிய வரு மானங்களை அதிகரிப்பிப்பார்என எதிர்பார்க் கின்றோம். இதற்காக எமது தர்மகர்த்தா சபைத்தலைவர் என்ற முறையில் திரு வெ. சபாநாயகம் அவர்கட்கு எனது நன்றியை முன்மொழிகின்றேன். தர்மகர்த்தா சபை உறுப்பினர்களான திரு. வெ. சபாநாயகம், தலைவர், திரு நா. கனேசபிள்ளை செயலாளர், திரு தி. மானிக்கவார். திரு க. குமாரசாமி திரு கி சிற்றம்பலம், திரு ந தில்லை சிற்றம் பலம். திரு ஸ்ரீபு. மழவராயர் திரு து. நாகநாதன் ஆகியோருக்கு எமது நன்றி உரித்தாகுக.

கட்டிடங்கள்

எமது கல்லூரி அலுவலகம் 1931 ல் தாபகரால் நிர்மானிக்கப்பட்ட கட்டிடத்தி லேயே இன்றும் இயங்கி வருகின்றது. கொத்தணிப்பாடசாலைகளின் நிர்வாகத்தை யும் சேர்த்து மேற்கொள்ள வேண்டிய பாரிய வேலைப்பணிகள், பொறுப்புக்களை நிறைவேற்ற நவீன விசாலமான அலுவலகம் ஒன்று புதிய விஞ்ஞானகூடத்தின்முன்பாக அமைக்கப்பட வேண்டும். இதன் மேல் மாடிகல்லூரியின் புதிய நூலகமாக மாற்றப் பட வேண்டும். இதற்கு நாங்கள் அரசாங்க உதவியையே எதிர்பார்க்கின்றோம். திருத்த வேலைகளுக்கு தரப்படாத உதவிகளையும் சேர்த்து மொத்தமாக எமது கல்விப்பனிப் பாளர் இக் கட்டிடவேலைக்கு முக்கியத்துவ மும், முன்னுரிமையும் அளிப்பாரென எதிர் பார்க்கின்றேன்.

நீர்விநியோகம்

எமது பாடசாலை நீர் விநியோகம் 1950 ம் ஆண்டுகளில் குமாரசாமி அதிபர் காலத்து தாபிக்கப்பட்ட தொட்டியிலேயே இன்றும் நடைபெறுகிறது. அப்போதய இரும்புக்குழாய்கள் உக்கிப்பழுதாகி வரு

கின்றன. உயரம் குறைந்த அந்த விர்த் தொட்டியிலிருந்து மேல் மாடிக்கு நீர் விநியோகம் செய்யமுடியாமலிருக்கின்றது. அலுவலக, நூல்நிலையக்கட்டிடம் அமைக்கப் படும்போது அதன் மேல் நீர்த்தொட்டி ஒன்று கட்டும் பணியும் மேற்கொண்டு இக் குறைபாட்டைத் தவிர்த்துக்கொள்ள எமது கல்விப்பணிப்பாளர் முன்னுரிமையளிப்பா ரென எதிர்பார்கின்றோம்.

மனையியல்

எம்மிடம் பொருத்தமான மனையியல் கூடமும், மனையியல் ஆசிரியருமிருக்கின்றனர் க. பொ. த. உயர்தர வகுப்புக்கு மனையி யலை ஒரு பாடமாகக் கற்பிப்பதற்கு கல்வி இலாகாவின் அனுமதியை எதிர்பார்க்கின் றோம். அதற்குரிய அனுமதியை எம் கல்விப் பணிப்பாளர் தருவார் என எதிர்பார்கின் றோம்.

எமது தேவைகள்

பிரதம பிரிவில் வடக்குப்புற கட்டிடம் ஓலையால் வேயப்பட்ட நிலையில் உள்ளது. பழைய மரவேலை கூடத்தில் நடைபெறும் பாலர் வகுப்புக்களும் ஓலையால் வேயப்பட் டிருக்கின்றன. இவற்றிற்கு பதில் நிரந்தரக் கட்டிடங்களை இவ்வாண்டு கட்டிக்கொள்ள முடியாவிட்டாலும் நீண்டகாலத்திட்டத் தில் படிப்படியாகக் கட்டுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

பாடசாலையைச் சுற்றிவர மதில்கட்டப் படவேண்டியது பாடசாலையின் தளபாட பாதுகாப்பிற்கும் ஒழுங்கு முறைக்கும் அவசியமாகவுள்ளது. இவ்வருடம் பாடசாலை யின் மேற்குப்புற மதில்வேலை நடைபெறு கிறது. மறு வருடங்களில் ஏனையவும் பூர்த்தி செய்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

வசதிக்கட்டண ஆசிரியர்கள்

வசதிக்கட்டணத்தில் சம்பளம் பெறும் ஏழு ஆசிரியர்கள் எமது ஆசிரியர் குழாத்தில் உள்ளனர். பிரதம பிரிவில் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர்களின் பற்றுக்குறை காரண மாக இவர்கள் சேவை பெறப்பட்டது. சித்திரத்திற்கு திரு கதவகாசன் நீண்ட காலமாக வசதிக்கட்டண ஆசிரியராக கடமை புரிகிறார். குறைந்த சம்பளத்தில் மிகுந்த சேவையாற்றிவரும் இவர்களுக்கு எமது நன்றி உரித்தாகுக. வசதிக்கட்டண ஆசிரி யர்களை நிரந்தரமாக்கவோ அல்லது அவர் களுக்கு பதில் நிரந்தர ஆசிரியர்களைத் தரவோ நடவடிக்கை எடுப்பதை நாம் பெரிதும் விரும்புகிறோம்.

ஒரு நடன ஆசிரியையின் தேவை எமக்கு நீண்டகால குறையாக இருக்கிறது. ஒரு உடற்பயிற்சி ஆசிரியையும் ஆசிரியர் ஒருவரும் மிக விரைவில் கல்வி இலாகா வால் எமக்கு அனுப்பப்படுமாயின் மிகுந்த நன்றியுடையவராவோம்.

நன்றி

இந்த அறிக்கையை முடிப்பதற்கு முன் னர் இக்கல்லூரியின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டி வரும் கல்விப்பணிப்பாளர் கல்வித்துறை அதிகாரிகள், கணக்காளர், கட்டிடப்பகுதி பொறியியலாளர் ஆகியோ ருக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். ஆசிரிய ஆலோசகர்கள் விஞ்ஞானம், கணி தம் ஆங்கிலம். சமூகக்கல்வி, தமிழ் ஆகிய துறைகளில் அளித்துவரும் ஒத்துழைப்பிற்கு எமது நன்றி எமது கல்லூரி ஆசிரியர் திரு ந பாலசிங்கம் அவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆங்கில துணைப்பகுதிநேர போதனாசிரியராக செல்வதையிட்டு எமது பாராட்டுக்களைப் பெருமையுடன் தெரிவிக் கின்றோம். இக்கல்லூரியை திறம்பட இயக்கு வதற்கும் உறுதுணையாக உதவும் ஆசிரியர் களுக்கும், ஆய்வுகூட உதவியாளர்களுக்கும் அலுவலக உத்தியோகஸ்தர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் இவர்களது ஒத்துழைப்பு இன்றேல் இங்கு எதனையும் என்னால் சாதித்து விடமுடி யாது. இவர்கள் எல்லோ ருக்கும் எனது இதயம் கனிந்த நன்றி உரித் தாகுக. நிர்வாக வேலைகளில் திறம்பட ஒத்துழைப்பு நல்கும்

உப-அதிபர் திரு. த. சேனுதிராசா அவர்களுக்கும் சிரேஸ்ட உதவியாளர்கள் திரு. வே. சந்திரசேகரம்பிள்ளை, திரு. சு. மழவராயர், திரு வ. ஆறுமுகம் ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆசிரியர்கள் பல குழுக்களாகப் பிரிந்து செயற்பட்டு நிர்வாக வேலைக்கு உதவுகின்றனர். பாடசாலையின் சாதாரண பரீட்சைக்கு விண்ணப்பப் படிவங்கள் அனுப்புவதற்கு திரு. த. பரமேஸ்வரன், திரு. ச. நவரத்தினராசவேல், திரு. வ. கமலநாதன் ஆகியோர் உதவுகின்றனர். உயர்தர வகுப்புப் பரீட்சைக்கு பொறுப்பாக திரு. வி. எஸ். கந்தசாமி, திரு. ச. தருமலிங்கம், திரு. க. சுப்பிரமணியம். கல்லூரி நேரசூசியைத் தயாரிக்கும் திரு. வி. எஸ். கந்தசாமி, திரு வ. ஆறுமுகம், திரு ச. தருமலிங்கம் ஆகியோருக்கும் எனது நன்றி உரித்தாகும். கல்லூரியில் நடைபெறும் சமய கலாச்சார விழாக்களுக்கு பொறுப்பாக இருக்கும் திரு. செ. விசுவலிங்கம், திரு. மு. செல்லத்துரை திரு. க. சாம்பமூர்த்தி, திரு வே. சுந்தரலிங்கம் ஆகியோருக்கு எனது நன்றி உரித்தாகுக. பாடசாலை நிர்வாக வேலைகளில் திணைக்களம் கேட்கும் விபரங்களை கொடுப்பதில் ஆசிரியர் திரு வே. சண்முகலிங்கமும், அலுவலக ஊழியர்களும் காட்டிவரும் ஒத்துழைப்புக்கு எனது நன்றி உரித்தாகுக. பாடசாலை இலவச புத்தக விநியோகம், வழிகாட்டல் நூல்களுக்கும் பொறுப்பாக இருக்கும் திரு. மு. செல்லத்துரையின் சேவை பாராட்டப்படவேண்டியதாகும். மாணவர்களைக் கல்லூரியில் சேர்த்தல், மாணவர் ஒழுங்கு விவகாரம் போன்ற விடயங்களில் திருவாளர்கள் வே. சந்திரசேகரம்பிள்ளை, வ. ஆறுமுகம், ஆகியோர் நிர்வாகக் குழுவில் நேரடியாகத் தோள்கொடுத்து உதவி எனது நிர்வாகத்திற்கு உதவியாக இருக்கின்றனர். அலுவலகத்தில் கணக்கு வைப்பு தட்டச்சுப் பொறித்தல் சுற்றுநிருபங்களை கோவைப் படுத்துதல் இன்னோரன்ன விடயங்களைக் கவனித்துவரும் திருவாளர்கள் கா. தாமோதரம்பிள், ஜே. பி. டி. இராசா ச. கிருஷ்ணபிள்ளை, பொ. ஜெகநாதன், த. விசுவலிங்கம், சி. செல்லத்துரை, சி. நடராசா, சுகாதாரத் தொழிலாளி வே. சுந்தரம், காவலாளி வ. சிவக்கொழுந்து ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றி.

மாணவர்கள் மத்தியில் ஒழுங்கை நிலைநாட்டி நிர்வாகத்திற்கு உதவும் மாணவத் தலைவர்களுக்கும், வகுப்புத் தலைவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

இவ்விழா அமைப்பிற்கு உதவிய அமைப்புக் குழுவினருக்கு எனது நன்றி உரித்தாகும். நீண்ட காலத்தின் பின்னர் பரிசளிப்பு விழாவிலன்று சோமாஸ்கந்தன் சஞ்சிகை வெளிவர உதவிய ஆசிரியர்கள் திரு. திரு. சு. மழவராயர். திரு. செ. விசுவலிங்கம் ஆகியோருக்கும், குழுவினருக்கும் எனது நன்றி.

பரிசளிப்பு விழா நடைபெற நிதி உதவி வழங்கிய பெற்றோருக்கும், நலன் விரும்பிகளுக்கும், விழாவைச் சிறப்புற அமைக்க உதவிய ஆசிரியப் பெருமக்களுக்கும் எனது நன்றியை மீண்டும் தெரிவித்து அமர்கின்றேன்.

வாழ்க ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி !
வளர்க அதன் இலட்சியங்கள் !

ந. கணேசபிள்ளை
அதிபர்

# பரிசு பெறுபவர்கள்

1987 ஆண்டு 01

| மாணவர் பெயர் | பாடம் |
|---|---|
| சி. செந்தில்குகன் | கணிதம் |
| வி. துளசிகா | கணிதம் |
| ப. பிரதீப் | கணிதம் |
| பா. வாகீசன் | மொழி |
| கு. தர்சனு | மொழி |
| க. றெஜீதா | மொழி |
| ம. செந்தில்ரூபன் | சுற்றுடல் |
| ம ஜெனனி | சுற்றுடல் |
| ஸ்ரீ. கோகுலன் | சுற்றுடல் |
| சு. தனுஜா | சமயம் |
| க. தர்மரூபி | சமயம் |
| பூ. குலமதி | சமயம் |
| ந. பிரதீபா | அழகியல் |
| ச. கிருஷ்ணவேணி | அழகியல் |
| யோ. பிரபாநந்தினி | அழகியல் |
| செ. பிரதீபா | ஆக்கம் |
| க. சுகிதா | ஆக்கம் |
| ப. ரூபினி | ஆக்கம் |
| வி. தர்சினி | பொதுத்திறமை |
| சி. விஜித்தா | பொதுத்திறமை |

| 1986 ஆண்டு 01 | 1987 ஆண்டு 02 |
|---|---|
| இ. சார்மிளா | மொழி, கணிதம். |
| தி. டோசி | மொழி, பொதுத்திறமை |
| தி. அனுஷா | மொழி, சுற்றுடல் |
| செ. சிவக்குமாரி | கணிதம், தமிழ் |
| வே. ராகுலன் | கணிதம் சுற்றுடல், |
| ச. தாருணி | கணிதம் |
| வி. துஷாரா | சுற்றுடல், பொதுத்திறமை |
| பொ. ரஜனி | சுற்றுடல், தமிழ் |
| இ. தர்சனு | அழகியல், கணிதம், பொதுத்திறமை |
| தி. ஜெயதீபா | அழகியல், பொதுத்திறமை |
| சி. றேனுமதி | அழகியல் |
| க. மோகனு | சமயம், ஆக்கம் |
| அ. அருட்குமரன் | சமயம், சுற்றுடல் |
| சி. சிவேசன் | சமயம் |
| ம. ஜெயந்தன் | ஆக்கம் |
| செ. விஜேதினி | ஆக்கம் |

| | |
|---|---|
| செ. கவிதா | தமிழ் |
| வே. யமுனாவதி | கணிதம் |
| அ. பிரபாகரன் | சுற்றாடல் |
| ச. பிரியாநந்தன் | சமயம் |
| ம. வாசுகி | சமயம் |
| க. விவாகரன் | சமயம் |
| வி. விஜீத்தா | ஆக்கம் |
| செ. உமாசுதன் | ஆக்கம் |
| க. கவிதா | அழகியல் |
| க. தர்சினி | அக்கியல் |
| ச. அரிகரன் | பொதுத்திறவை |
| சி. வர்மா | பொதுத்திறமை |

| 1986 ஆண்டு 02 | 1987 ஆண்டு 03 |
|---|---|
| ஜெ. யசோதா | மொழி, பொதுத்திறமை |
| பா. வற்சலா | மொழி |
| சி. சுபத்திரா | மொழி, பொதுத்திறமை, அழகியல் |
| பா. நிஷாந்தன் | கணிதம், சமயம் |
| செ. ஜெயதீபன் | கணிதம். பொதுத்திறமை |
| ம. செல்வேந்திரன் | கணிதம், சுற்றாடல் |
| இ. சதீஸ்கரன் | சுற்றாடல் |
| சி. பிரதாசினி | சுற்றாடல், கணிதம் |
| ப. இராஜயோகன் | சுற்றாடல். பொதுத்திறமை |
| ப. கனகாம்பிகை | சமயம், மொழி, பொதுத்திறமை |
| சுலோஜனா | சமயம் |
| சு. சதிசா | சமயம் |
| சிவலோகநாயகி | அழகியல் |
| சி. சபேசன் | அழகியல் |
| ப. கோபிகிருஸ்ணா | ஆக்கமுயற்சி, சுற்றாடல் |
| சோ. தர்சினி | ஆக்கமுயற்சி |
| வ. சுஜிவன் | ஆக்கமுயற்சி, பொதுத்திறமை |
| வே. தீபா | மொழி |
| செ. சோபனா | கணிதம் |
| வே. சுகந்தன் | கணிதம் |
| கு. ஜெனிதா | சுற்றாடல் |
| க. வாகீசன் | சமயம் |
| கோ. சாந்தரூபன் | சமயம் |
| தி. ஜலஜா | ஆக்கம் |
| ப. அன்பரசி | ஆக்கம் |
| சி. தயாபரன் | ஆக்கம் |
| கோ. பத்மபிரியா | அழகியல் |
| ப. நவிதா | அழகியல் |
| சு. சிவரதி | அழகியல் |

| 1986 ஆண்டு 3 | 1987 ஆண்டு 4 |
|---|---|
| தெ. ஞானகுமரன் | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், பொதுத்திறமை |
| தி. சிவரதி | சமயம், தமிழ், ஆரம்பவிஞ்ஞானம், தையல், அழகியல், பொதுத்திறமை |
| கு. லீலானந்தன் | சமயம், தமிழ், கணிதம் ஆக்கம் |
| செ. நிலானி | தமிழ் |
| சி. துளசிதாசன் | கணிதம், ஆங்கிலம், ஆரம்பவிஞ்ஞானம், சுற்றுடல், ஆக்கம், பொதுத்திறமை |
| இ. சோபனு | கணிதம், ஆங்கிலம், ஆரம்பவிஞ்ஞானம், தையல், பொதுத்திறமை |
| கௌ. வைகுந்தவாசன் | ஆங்கிலம் |
| கு. திருக்குமரன் | ஆங்கிலம், சுற்றுடல், ஆக்கம் |
| நா. வாகினி | ஆரம்பவிஞ்ஞானம், சுற்றுடல், தையல், தமிழ், பொதுத்திறமை |
| இ. கேதீஸ்வரன் | அழகியல், ஆக்கத்தொழிற்பாடு, சமயம் |
| நா. சோபிதா | அழகியல், தமிழ் |
| க. காண்டீபன் | அழகியல் |
| அ. ரவீந்திரன் | ஆக்கம், மொழி, பொதுத்திறமை |
| சி. பிரதீபன் | ஆக்கம் |
| சி. தபோதரன் | ஆக்கம் |
| சி. சிவகௌரி | தையல், அழகியல் |
| ந. கலாதேவி | தையல் |
| ம. சுயேந்திரன் | கணிதம், பொதுத்திறமை |
| க. பிரபாகரன் | சமயம் |
| சி. ஜெயச்சித்திரா | சமயம் |
| செ. செல்வநர்மதா | சமயம் |
| த. கௌசலா | சுற்றுடல் |
| ப. சாமினி | சுற்றுடல் |
| ம. உஷா | சுற்றுடல் |
| தி. விமலன் | சுற்றுடல் |
| ம. துஷியந்தன் | ஆக்கம் |
| பா. சுதர்சன் | அழகியல் |
| சி. புஸ்பதேவி | அழகியல் |
| ச. விஜித்தா | அழகியல் |

| 1986 ஆண்டு 4 | 1987 ஆண்டு 5 |
|---|---|
| ஜெ. சபேசன் | சமயம், தமிழ், கணிதம், ஆரம்பவிஞ்ஞானம், சுற்றுடல், வரைதல் பொதுத்திறமை |
| சி. அமுதா | சமயம், ஆக்கத்தொழிற்பாடு |
| ச. யமுனு | சமயம் |
| சி. கவிதா | தமிழ், ஆக்கத்தொழிற்பாடு சமயம் |
| மே. ராகினி | தமிழ் |
| க. குகநேசன் | ஆங்கிலம், கணிதம், சுற்றுடல், சமயம், தமிழ், ஆரம்பவிஞ்ஞானம், பொதுத்திறமை |

| | |
|---|---|
| வி. பார்த்திபன் | ஆங்கிலம், கணிதம், ஆரம்பவிஞ்ஞானம், அழகியல், தமிழ் சுற்றுடல், வரைதல், பொதுத்திறமை |
| த. சுஜந்தா | ஆங்கிலம், ஆக்கம் |
| த. கயேந்திரன் | ஆரம்பவிஞ்ஞானம், சுற்றுடல், ஆங்கிலம், ஆக்கம் |
| நா. சபாரத்தினம் | அழகியல் |
| சே. சாந்தகுமார் | அழகியல் |
| சி. சசிகலா | ஆக்கத்தொழிற்பாடு |
| செ. முரளிதரன் | சமயம், சுற்றுடல் |
| ச. சுதாலட்சுமி | ஆங்கிலம் |
| த. அனந்தகோபன் | கணிதம் |
| ப. கோகுலன் | வரைதல் |
| தா. ஞானச்சந்திரன் | ஆக்கம் |

1986 ஆண்டு 05 1987 ஆண்டு 06

| | |
|---|---|
| மு. சந்திரகுமார் | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், சுற்றுடல், பொதுத்திறமை |
| சி. ஞானமூர்த்தி | சமயம், தமிழ், கணிதம், ஆரம்பவிஞ்ஞானம் சுற்றுடல், பொதுத்திறமை, ஆங்கிலம் |
| பொ. ஜெயஸ்கரன் | சமயம், அழகியல், ஆக்கம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, சுகாதாரம் |
| ச. யோகேஸ்வரி | தமிழ், கணிதம், அழகியல் |
| ஞா. எலிசபெத்டெய்சி | ஆங்கிலம் |
| இ. கல்கிதாசன் | ஆரம்பவிஞ்ஞானம், சுற்றுடல் |
| த. குணாளன் | ஆரம்பவிஞ்ஞானம் |
| ச. சோபனா | அழகியல் |
| ச. முரளிதரன் | ஆக்கம் |
| வி. கேதீஸ்குமாரன் | ஆக்கம் |
| ம. திவீந்திரன் | ஆக்கம் |
| ஜெ. பிறேமா | தையல் |
| ம. கெங்காதேவி | தையல் |
| செ. செல்வரஜனி | தையல் |
| பா. நிருபா | தமிழ், சமயம் |
| இ. ரவி | கணிதம் |

ஆண்டு 6 1986 ஆண்டு 7 1987

| | |
|---|---|
| நா. சுதர்சன் | பொதுத்திறமை, ஆங்கிலம், கணிதம், அழகியற்கலை ஆக்கம், விஞ்ஞானம். |
| து. அருள்ராஜ் | சமயம், தமிழ் |
| ம. வசந்ததாஸ் | சுற்றுடல், தமிழ், சமூகக்கல்வி. |
| ஜெ. தற்பரன் | அழகியற்கலை. |
| சி. கேதீஸ்வரன் | அழகியற்கலை. |
| சு. செல்வசுகிந்தன் | அழகியற்கலை. |

| | |
|---|---|
| வி. சிவசுதன் | ஆக்கம் |
| இ. கௌசலாதேவி | பொதுத்திறமை, ஆங்கிலம், ஆக்கம், கணிதம், சுற்றுடல், சமயம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம். |
| சு. குகரமணி | சமயம், ஆங்கிலம். |
| செ. மதிவனி | தமிழ், சுற்றுடல், கணிதம், சமயம், விஞ்ஞானம் |
| க சுவர்ணமாலா | ஆங்கிலம் |

| ஆண்டு 7 1986 | ஆண்டு 8 1987 |
|---|---|
| த அருட்குமரன் | விவசாயம், தமிழ், ஆங்கிலம் |
| து. மோகன்ராஜ் | தமிழ், விஞ்ஞானம், சித்திரம் |
| சி. யோகநாதன் | மரவேலை |
| சி. சிவாகரன் | சித்திரம் |
| சி. ஸ்ரீகரன் | விஞ்ஞானம் |
| பா. வித்தியாதிபதி | மரவேலை |
| இ. உமாகாந்தன் | சித்திரம் |
| பா. பத்மலோசனி | பொதுத்திறமை, சமயம், ஆங்கிலம் கணிதம், சமூகக் கல்வி, சுகாதாரம் மனையியல். |
| சி. சுவர்ணதேவி | தையல், சமயம், தமிழ். |
| கி. வாசுகி | சங்கீதம் |
| பொ. சுதர்சினி | தையல் |
| இ. சாந்தி | மனைப்பொருளியல், கணிதம் |
| ப. செல்வரதி | சமயம் |
| இ. சுவர்ணதேவி | தமிழ், தையல் |
| தி. ஞானசுகி | சுகாதாரம் |

| ஆண்டு 8 (1986) | ஆண்டு 9 (1987) |
|---|---|
| இ. ஜெயசீலன் | பொதுத் திறமை, கணிதம், விஞ்ஞானம், தமிழ், சித்திரம் |
| ஜெ. ஜெகதீபன் | விவசாயம், சுகாதாரம், தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம் |
| சி சிவரட்ணசர்மா | தமிழ், சமூகக்கல்வி |
| ச. சந்திரகாந்தன் | மரவேலை, தமிழ், ஆங்கிலம், வர்த்தகம், தமிழ் |
| க. செந்தில்நாதசிவம் | சித்திரம் |
| கு. நந்தகுமார் | விவசாயம் |
| க. கிருஷ்ணகுமார் | மரவேலை |
| சீ. லீலாவதி | சமயம், சமூகக்கல்வி, தமிழ் |
| ந. தாரணி | ஆங்கிலம் |
| தி. சந்திரா | மனையியல், சங்கீதம் |
| வே. சாந்தரூபி | தையல் |
| ந கல்பனா | சங்கீதம் |
| நா. சீதாதேவி | தையல் |
| தா. கலைமதி | மனையியல் |

| ஆண்டு 9 (1986) | ஆண்டு 10 (1987) |
|---|---|
| அ. விமலதாஸ் | விஞ்ஞானம், சமூகக் கல்வி, விவசாயம், சைவசமம், சைவசமயம், தமிழ் |
| செ. சுதாகரன் | சைவசமயம், தமிழ் |
| ம சிவயோகன் | கணிதம், சமூகக் கல்வி |
| தி. உதயவண்ணன் | மரவேலை |
| க, பிரபாகரன் | சித்திரம் |
| கி. சசிகரன் | மரவேலை |
| மா. பதியுகன் | விவசாயம் |
| ஞா. ஞானராணி | தமிழ், மனையில், சைவசமயம், ஆங்கிலம் |
| ச. சிவசக்தி | ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் |
| அ. சிவரதி | சங்கீதம் |
| உ. சத்தியகௌரி | தையல் |
| தா. ஜெயாமதி | தையல் |

| ஆண்டு 10 (1986) | ஆண்டு 11 (1987) |
|---|---|
| K. சங்கநிதி | கணிதம், விவசாயம், விஞ்ஞானம், சமூகவியல், வர்த்தகம், பொதுத்திறமை |
| K. உதயநாதசிவம் | தமிழ், விஞ்ஞானம், வர்த்தகம், ஆங்கிலம், கணிதம் |
| S. வித்தியாகிபதி | சைவசமயம், தமிழ் |
| S. சிவகுமார் | மரவேலை |
| R. விஷ்ணுகரன் | சமூகக் கல்வி, விவசாயம், தமிழ் |
| த. திருக்குமார் | சித்திரம் |
| S பரமானந்தம் | விவசாயம் |
| M. கலாகேந்திரன் | சித்திரம் |
| R. யாமினி | மனையியல் |
| M. சந்திரவதனி | தையல், சமயம், மனையியல் |
| S. கலைவாணி | சமயம் |
| N. ஜெயந்தினி | சுகாதாரம், சமயம், மனையயல் |
| M. பாமனி | தமிழ், மனையியல் |
| T. அருள்மதி | கணிதம் |
| E. யமுனா | மனையியல் |
| T. அருந்தவராணி | தையல் |

| | ஆண்டு 11 (198 ) |
|---|---|
| M. இந்திரபாலா | தமிழ், விஞ்ஞானம், சமூகவியல், சுகாதாரம், வர்த்தகம், பொதும்திறமை |
| T. பிரேமானந்த் | சமயம், சமூகவியல் |
| T. பிரபாகரன் | ஆங்கிலம், மரவேலை, சித்திரம் |
| S. சசிந்திரன் | கணிதம் |
| K. கெங்காதரன் | விவசாயம் |
| T. அமிர்தா | தையல், சமயம் |

| | |
|---|---|
| T. கோபிதா | சமயம் |
| K. பத்திரா | மனையியல் |
| P. புஸ்பமலர் | சங்கீதம் |

## ஆண்டு 12 ஏ, பி 1986 1987 (கலை, வர்த்தகம்)

| | |
|---|---|
| ந. லிங்கேஸ்வரன் | பொதுத்திறமை, அளவையியல், வர்த்தகம் கணக்கியல் |
| அ. கலைச்செல்வன் | வர்த்தகம், கணக்கியல், பொருளியல் 1986 அளவையியல், வர்த்தகம், பொருளியல், கணக்கியல் 1987 |
| ந. இரவீந்திரன் | அளவையியல், வர்த்தகம், பொருளியல் 1987 |
| வெ. குணசேகரம் | இந்துநாகரீகம், இந்துநாகரீகம் |
| செ. உமா | இந்துநாகரீகம், தமிழ் |
| ஞா. ருக்குமணி | இந்துநாகரீகம் |
| ப. உதயகுமாரி | தமிழ், பொதுத்திறமை, தமிழ் |
| கௌ. மதிவதனு | தமிழ் |

## ஆண்டு 12 ஏ, பி 1986, 1987 (விஞ்ஞானம்)

| | |
|---|---|
| நா. ஸ்ரீதரன் | தூயகணிதம், பொதுத்திறமை, பௌதிகம், இரசாயனம் |
| பொ. சண்முகதாஸன் | பிரயோககணிதம் |
| ஆ. மீனாட்சி | பொதுத்திறமை, விலங்கியல் |
| சு. புஸ்பதேவி | தாவரவியல், விலங்கியல் |

## ஆண்டு 13 1987 பரீட்சை எழுதியவர்கள்

| | |
|---|---|
| மா. பரிபூரணநாதன் | வர்த்தகம், கணக்கியல், பொருளியல் |
| தி. வேல்நம்பி | வர்த்தகம், இந்துநாகரிகம், கணக்கியல், பொருளியல் |
| ஆ. நடராசா | வர்த்தகம், இந்துநாகரீகம், கணக்கியல் |
| பெ. செல்வராசா | பொருளியல் |
| சோ. பத்மாவதி | பொதுத்திறமை, வர்த்தகம் |
| ந. சுசீலாதேவி | இந்துநாகரீகம் |

விசேட பரிசில்

| | |
|---|---|
| செ. செல்வமோகன் | கல்வி, ஒழுக்கம். தலைமைத்துவம் சார்ந்த பல்துறைப் பரிசு 1986 — 87 |

# பரிசளிப்பு விழா நிதி 1988

## ஞாபகார்த்தப் பரிசு வழங்கியோர்

| வழங்கியவர் | ஞாபாகத்துக்குரியவர் | தொகை |
|---|---|---|
| திரு. கந்தசாமித்துரை | திரு. க. ரவி, யாழ்ப்பாணம் | 500 00 |
| திரு. ந. சுதாகர் | திரு. கா. சிவகுரு, புத்தூர் | 100 00 |
| திரு. த. கணேசமூர்த்தி | திரு. க. தாமோதரம்பிள்ளை ஆவரங்கால் | 100 00 |
| திரு. து. விநாயகலிங்கம் | திரு சு. குமாரசுவாமி முன்னைநாள் அதிபர் | 100 00 |
| திரு. ச. தர்மலிங்கம் | திரு. சி. சங்கரப்பிள்ளை அச்செழு | 100 00 |
| Dr. க. கிருஷ்ணராசா | திரு. க. விசுவநாதன். முன்னைநாள் ஆசிரியர் | 100 00 |
| திரு. அ. க. த கிருஷ்ணராசா | திரு. அ. க. தர்மலிங்கம் | 100 00 |
| திரு. நா. கணேசபிள்ளை | திரு. சா. வீரசிங்கம். முன்னைநாள் அதிபர் | 100 00 |
| திரு. த. சேனாதிராயர் | | 100 00 |
| திரு. வே. சந்திரசேகரம்பிள்ளை | திரு. மு. வேலாயுதர். முன்னைநாள் கிராம அதிகாரி | 100 00 |
| திரு. சு மழவராயர் | திரு. P. சுப்பிரமணியம் | 100 00 |
| திரு. வ. ஆறுமுகம் | திரு. ஆ. வயிரவநாதர் ஆவரங்கால் | 100 00 |
| திரு. கு. மேகநாதன் | | 100 00 |
| திரு. S. தம்பையா | | 100 00 |
| திரு. செ. விசுவலிங்கம் | திரு. செ. சிவசங்கரப்பிள்ளை புத்தூர் | 100 00 |
| திருமதி. L. கணேசன் | திரு. சி. முத்துச்சாமி புத்தூர் | 100 00 |
| திரும்தி. ம. லோகேஸ்வரன் | திரு. ●. சதாசிவம் புத்தூர் | 100 00 |
| திரு. க. சிவநேசன் | திரு. க. சச்சிதானந்தன் சிறுப்பிட்டி | 100 00 |
| திரு. ச. கிருஷ்ணபிள்ளை | திருமதி. சரவணமுத்து சின்னப்பிள்ளை | 100 00 |
| திரு. ச. நவரத்தினவேல் | திருமதி. சி. சங்கரப்பிள்ளை | 100 00 |

# பாடநூல்களும் ஈழத்தின் ஆதிக்குடிகளும்

ஒரு நாட்டின் வரலாறு என்பதும், வரலாற்று உண்மையென்பதும் அந்த நாட்டுடன் தொடர்புடையதாகக் கிடைக்கப் பெறும் சான்றுகளின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படவேண்டியதொன்ருகும். இதில் புராதன வரலாற்றுக் கதைகள், ஐதீகங்கள் என்பன ஆய்வின் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் அதேவேளை, புதிய வரலாற்றுத் தரவுகளையும், விஞ்ஞானபூர்வமான முடிபுகளையும் ஆய்வில் முக்கியப்படுத்துவது அவசியமாகும். அது கடந்தகால வரலாற்று உண்மைகளைக் கண்டு கொள்ள உதவுவதோடு புதிய வரலாற்று முடிபுகளையும் முன்வைக்க உதவும். இந்த அடிப்படையில் இலங்கைப் பாட நூல்களில் நீண்டகாலமாக இடம் பெற்று வரும் ஆதிக்குடிகள் பற்றிய வரலாற்று நிகழ்வுகளை நோக்கும்போது அவை அண்மைக்கால வரலாற்று முடிவுகளால் மறுபரிசீலனை செய்யப்படவேண்டிய ஒன்ருகவே காணப்படுகின்றது.

இலங்கையில் தொல்பொருள், மானிடவியல், சமூகவியல் ஆய்வுகள் வளர்ச்சி அடையாத கட்டத்தில் தீபவம்சம், மகாவம்சம் போன்ற பாளிநூல்களை அடிப்படையாக வைததே இலங்கையின் புராதன வரலாறு பெருமளவுக்கு எழுதப்பட்டுள்ளது. மௌரிய மன்னன் அசோகன் வட இந்திய தலைநகரில் ஆட்சிசெய்தபோது பௌத்த மதம் கி. மு. 3ஆம் நூற்ருண்டில் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போது கூடவே வரலாற்று மரபுகளைப் பேணுகின்ற முறைமையும் இலங்கையில் அறிமுகமாகியது. இதனுல் மகாவிகாரையை மையமாக வைத்து நீண்ட காலமாக மக்கள் மத்தியில் நிலவிய வரலாற்றுக் கதைகள் வாய்மொழிச் செய்திகள் மூலம் பேணப்பட்டது.

இவற்றை அடிப்படையாக வைத்தே 1000 ஆண்டுகால வரலாற்றை உள்ளடக்கிய மகாவம்சம் என்ற நூல் கி. பி. 6ஆம் நூற்ருண்டில் எழுதப்பட்டது இந் நூல் எழுதப்பட்ட காலகட்டத்தில் தமிழ் நாட்டில் பக்தி இயக்கம் தோன்றி பௌத்த சமண மதங்கள் வீழ்ச்சி அடைந்ததோடு அங்கிருந்து பல தமிழர் படையெடுப்புக்களும் இலங்கைமீது மேற்கொள்ளப்பட்டது. இத்தகைய அரசியல், மத சூழலால் பாதிக்கப்பட்ட மகாவம்ச ஆசிரியரான மகாநாம தேவர் சிங்கள இனத்தையும், பௌத்த மதத்தையும் முதன்மைப்படுத்தி இன, மத உணர்வுடன் வரலாற்றை நோக்கினர். அத்துடன் தமிழ் நாட்டின்மீது கொண்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பாரம்பரியமான இலங்கை தென்னிந்திய உறவைப் பெருமளவுக்கு மறைத்து, பௌத்த மதம் பரவக் காரணமாக இருந்த வட இந்தியாவுடன் கொண்ட உறவை முக்கியப்படுத்தியும் மிகைப்படுத்தியும் கூறியுள்ளார். இதன் ஒரு அம்சமாகவே இலங்கையின் ஆதிக்குடியேற்றத்தை வட இந்தியாவுடன் தொடர்புபடுத்திக் கூறியுள்ளார் மகாவம்சத்தில் ஏற்பட்ட இப்போக்கு பிற்காலத்தில் பெரும்பான்மையான வரலாற்று ஆசிரியர் கருத்தில் நிலைத்துவிட்டதால் அவர்களின் வரலாற்று நூல்கள் பலவற்றில் இலங்கையின் புராதன வரலாற்று நிகழ்ச்சிகள் பல வட இந்தியப் பின்னணியில் நோக்கப்பட்டுள்ளது இந் நூல்களை அடிப்படையாக வைத்தே முழுக்க முழுக்க இலங்கைப் பாடநூல்கள் எழுதப்பட்டதினுல் இலங்கையின் பெரும்பான்மையான சிங்கள மக்கள் வடஇந்தியாவில் இருந்து வந்த ஆரிய மக்கள் வழித்தோன்றல்கள் எனவும், சிறுபான்மையான தமிழ் மக்கள் பிற்காலத்தில் தென்னிந்தியாவில் இருந்து வந்தவர்கள் என்ற கருத்து பாடசாலை மாணவர்களின் ஆரம்பக் கல்வியில் இருந்து புகுத்தப்பட்டு வருகின்றது.

ஈழத்தின் ஆதிக்குடியேற்றத்தை வட இந்தியாவுடன் தொடர்புபடுத்திக் கூறும் மகாவம்ச ஆசிரியர் அதற்குப் பின்னணியாக விஜயன் என்ற அரசகுமாரன்

இலங்கை வந்த சம்பவத்தை சான்றுதார மாகக் காட்டியுள்ளார். இலங்கைக்கு முதன்முறையாக வந்தவர்கள் விஜயனும் அவனது தோழர்களும் எனக்கூறும் மகா வம்ச ஆசிரியர் விஜயனின் பெற்றோரான தந்தை சிங்கபாகுவும், தாய் சிங்கவல்லியும் சிங்கத்திற்குப் பிறந்தவர்கள் எனக் கூறுகின் றார். இதன்மூலம் விஜயன் வழிவந்த பிற் கால சிங்கள மக்கள் தூய இனத்தவர் எனக் காட்ட முற்பட்டுள்ளார் என்பது தெரியவருகின்றது. சிங்கபாகு லாலா தேசத்தை ஆண்டபோது இவன் மகன் விஜயன் தந்தை சொல் கேளாது நடந்த தால் இவன்மீது ஆத்திரம் கொண்ட தந்தை இவனையும் இவனது 700 தோழர் களையும் கப்பலில் ஏற்றி நாடு கடத்தினன். இவர்கள் பல நாட்கள் கப்பலில் பயணம் செய்து இறுதியாக புத்தர் பரிநிர்வாணம் அடைந்த தினத்தில் இலங்கையின் வட பகுதியில் வந்து இறங்கினர். புத்தர் பரி நிர்வாணம் அடைந்த நாளில் விஜயன் இலங்கை வந்ததாகக் கூறுவது பிற்காலத் தில் பௌத்த தர்மம் தழைத்தோங்கப் போகும் நாடாக இலங்கையைக் காட்ட முற்பட்டுள்ளார் என்பது தெரிகிறது. விஜ யன் இலங்கை வந்தபோது இங்கிருந்தவர் கள் நாகரிகமற்ற அமானுயர்கள் எனவும் இதனல் விஜயன் தம்பபன்னி என்னும் கிராமத்தையும் அவனுடன் வந்த அமைச் சர்களான அனுராதன் மல்வத்துஓயா, கால ஓயாஆகியநதிக்கரைகளில்புதியகிராமங்களை அமைத்துக் காலப்போக்கில் நாட்டின் உட் பகுதியில் சென்று குடியேறினர். விஜயனின் பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கவந்த பண்டு காபயனும் அவன் மனைவி பத்மகாஞ்சனு வும் அவன் சகோதரர்களும் வட இந்தியா வில் இருந்து வந்து புதிய குடியேற்றங்களை ஏற்படுத்தியதாக மகாவம்சம் கூறுகிறது. இக் குடியேற்றங்கள் தீகவாபி, உறவெல பகுதிகளில் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இக்குடியேற்றங்கள் அனைத்தும் வடஇந்தியா வில் இருந்து ஏற்பட்டது என்பதை மகா வம்சம் அடிக்கடி வலியுறுத்திக் கூறியமை இங்கு கவனத்திற்குரியது.

மகாவம்சத்தில் இடம்பெற்றுள்ள விஜ யன் கதையை உண்மையென ஏற்றுக் கொண்ட வரலாற்று ஆசிரியர்கள் பலர் இக்கதையை அடிப்படையாக வைத்து ஈழத்தில் இடம்பெற்ற ஆதிக்குடியேற்றங் கள் பற்றி பல விளக்கங்கள் கொடுத்துள் ளனர். விஜயன் பெற்றோர் சிங்கத்திற்குப் பிறந்ததால் விஜயன் வழிவந்த ஈழத்துப் பெரும்பான்மை மக்கள் சிங்களவர் என வும், இந்த நாடு சிங்கதுவீபம் எனப் பெயர் பெற்றது எனவும் கூறுவர். சிங்கள மக்களின் மூதாதையினர் பேசிய மொழிக் கும் வட இந்தியாவின் கிழக்கு மேற்குப் பகுதியில் வாழ்ந்த ஆரிய மக்கள் பேசிய மொழிக்கும் தொடர்பு இருப்பதால் சிங் கள மொழி ஆரியமொழிக் குடும்பத்தைச் சேர்ந்ததோடு ஆரிய இனத்தைச் சேர்ந்த விஜயன் கூட்டத்தாரும் அவன் பின்வந்த பண்டுகாபயன் குழுவினரும் வடஇந்தியா வின் மேற்கு, கிழக்குப் பகுதியில் இருந்து வந்து ஈழத்தில் குடியேறியதாகவும் கொண் டனர். இத்தகைய ஆரிய குடியேற்றம் கி. மு 3ஆம் நூற்றுண்டு அளவில் இலங் கையின் பல பகுதிகளில் பரவி இருந்ததை ஆரிய மொழியில் அமைந்த பிராமிக் கல் வெட்டுக்கள் உறுதிப்படுத்துவதாக கலாநிதி பரணவிதான, கைகர் போன்ற வரலாற்று ஆசிரியர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். வரலாறு என்பது நாகரிகமுற்ற மக்களின் வரலாற்றில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் எனக் கூறும் பேராசிரியர் மென்டிஸ் அவர் கள் சிங்கள மக்களது வரலாற்றுடன் இலங்கை நாகரிகம் தோற்றம் பெற்றது என்பதற்கு ஆரியர் குடியேற்றத்தைச் சான்றுகக் கொண்டார். இதனல் ஆரியர் வருகையோடு இலங்கை வரலாறு ஆரம்ப மாவதுடன் அரச தோற்றம், விவசாயம், நீர்ப்பாசனம், இரும்பின்உபயோகம்என்பன இம்மக்களால் இலங்கைக்கு அறிமுகப்படுத் தப்பட்டு இவர்களே இலங்கை நாகரிகத் தைத் தோற்றுவித்தனர் என்ற கருத்தை யும் கொண்டுள்ளனர்.

இவ்வாருன கருத்து இன்று பெரும் பான்மை மக்கள் மத்தியில் வலுப் பெற்றுக் காணப்பட்டாலும் ஆரியர் குடியேற்றம் அல்லது விஜயன் வருகை இலங்கையில் நடந்ததற்கு எதுவித விஞ்ஞான பூர்வமான சான்றுகளும் காணப்படவில்லை. அண்மையில் விஜயன் கதையோடு தொடர்புடைய சில இடங்களைத் தொல்பொருள் ரீதியாக ஆய்வு நடத்திய இலங்கைத் தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம் அதற்கான சான்றுகள் எவையும் இலங்கையில் இல்லையெனக் குறிப்பிட்டுள்ளது. இதனுல் விஜயன் கதை கட்டுக்கதையெனவும் அதில் எந்தவித வரலாற்று உண்மையும் இல்லையெனவும் கலாநிதி. சுதந்திர குணதிலகா அவர்கள் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் பாரம்பரியமாக மக்கள் மத்தியில் நிலவி வரும் ஆரியர்களின் (விஜயன் வழி வந்தவர்களே) வழிவந்தவர்களே தற்கால சிங்கள மக்கள் என்ற கருத்திற்கு மாருக நூல்களை எழுதுவதில் சிங்கள வரலாற்று ஆசிரியர்களிடையே தயக்கமிருப்பதைக் காணலாம். உதாரணமாக 1980 இல் இலங்கை வரலாறு (History of Sri Lanka) என்ற நூலை எழுதிய கே. எம். டி. சில்வா அவர்கள் இலங்கையில் ஆரியர் குடியேற்றம் நடந்ததிற்கு எதுவித் தொல்பொருள் மானிடவியல் சான்றுகள் இல்லை என்பதை சுட்டிக்காட்டிய போதிலும், ஆரியர் குடியேற்றம் நடந்ததென்பதில் இருந்து விலகவிரும்பாது இலங்கையின் புராதன வரலாற்றைக் கூறியுள்ளார். இது வரலாறறு உண்மையை மறைக்க எடுக்கும் முயற்சியாக கொள்ளும் அதே வேளை பாரம்பரியமாக பௌத்தசிங்கள மக்கள் மத்தியில் நிலவிவந்த மூதாதையினரின் வரலாற்றுக் கதைக்கு முரணுக சுசப்பான உண்மையை கூறுவதிலுள்ள தயக்கத்தையே காட்டுகிறது.

இதனுல் இலங்கைப் பாடநூல்களில் இடம்பெற்றுள்ள ஆதிக்குடியேற்றங்கள் பற்றிய வரலாற்று உண்மையை நாம் தொல்பொருளியல், மானிடவியல், சமூகவியல் சான்றுகளின் அடிப்படையில் நோக்கவேண்டும். இச் சான்றுகளிற்கும் சமகால தென்னிந்திய சான்றுகளிற்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதால் ஈழத்து ஆதிக் குடியேற்றங்களைத் தென்னிந்தியப் பின்னணியில் நோக்க வேண்டியுள்ளது. ஈழத்தில் மனித குடியேற்றத்தின் வரலாறு தென்னுசியாவின் ஏனைய பிராந்தியங்களோடு ஒப்பிடுகின்ற போது மிகக் குறைவாகும். இதனுல் ஈழத்தின் ஆதிக்குடிகள் இலங்கைக்கு வெளியே இருந்து வந்ததென்பதில் அதிக கருத்து முரண்பாடு இல்லை. உலகில் மனிதன் கூர்ப்புத் தன்மையில் நான்கு படிமுறை வளர்ச்சி காணப்பட்டபோது, புவியின் வரலாற்றிலும் பல மாறுதல்கள் இடம் பெற்றன. பிலிஸ்ரோசின் எனப்புவிவரலாற்றுளரால் அழைக்கப்பட்ட காலப்பகுதியில் நான்கு தடவைகள உலகின் பல பாகங்கள் துருவப்பகுதியில் பெருகி வந்த பனிப் படர்வுக்கு இலக்காகின. இதில் நான்காவது பனிப்படர்வு 1,000 ஆண்டுகளிற்கு முன்னர் பின்வாங்கிச் சென்றதாக கூறப்படுகின்றது. இக்கட்டத்தில் கடல் மட்டம் குறைந்திருந்தமையால் ஏற்பட்ட நிலப்பாகங்களின் வழியாக அக்கால மனிதர்கள் தாம் முன்பு வாழ்ந்திராத இடங்களிற்கும் புலம்பெயர்ந்தனர். இவ்வாறே இன்று ரஷ்யாவின் கிழக்குக் கோடியில் உள்ள காம்ரட்ச்கா குடாவில் இருந்து அமெரிக்காவின் மேற்குக் கோடியில உள்ள அலகஸ்கா குடாவிற்கு அமெரிக்க செவ்விந்தியர்களின் மூதாதையினர் இடம்பெயர்ந்தனர்.

இதுபோல் இலங்கையின் முதல் மனிதர்களும் இறுதிப் பனிப்படர்வின் போது இராமர் அணைப்பகுதியில் இருந்திருக்கக் கூடிய நிலப்பாகத்தின் வழியாக தென்னிந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இப்பனிப்படர்வு முடியும் தறுவாயில் உலகின் பலபாகங்களிலும்ஏற்பட்டகாலநிலை மாறுதலாலும் மனிதன் இயற்கையாகவே அடைந்துவந்த தொழில்நுட்ப வளர்ச்சியாலும் அவனது வாழ்க்கை முறை வேகமாக மறையத் தொடங்கியது வில், அம்பு

போன்ற பொறிகள் அறியப்பட்டமையால் மிகச் சிறிய அம்பு, துணி போன்ற கருவிகளை உபயோகிக்கத் தொடங்கினர். இக்காலத்தையே தொல்லியலாளர் குறுணிக் கற்காலம் அல்லது இடைக்கற்காலம் (Mesolithic Period) எனக் கூறுவர் இலங்கையில் ஆதிமனிதருக்குரியதெனக் கருதப்படும் கற்கருவிகள் பெரும்பாலும் இத் தன்மை வாய்ந்தவை. இதற்கு முற்பட்ட கற்காலப் பண்பாடு உண்டு எனக் கூறினாலும் அதுபற்றிய சான்றுகள் தெளிவில்லை.

இவ் இடைக்காலப் பண்பாட்டிற்கும், சமகால தென்னிந்தியப் பண்பாட்டிற்கும் இடையே மொழி பண்பாட்டு ரீதியில் நெருங்கிய ஒற்றுமைத் தன்மை காணப்படுகிறது. குறிப்பாக தமிழ்நாட்டில் திருநெல்வேலி தேரிகுறுணி கற்கால கருவிகள் தமிழ்நாடு தவிர இலங்கையில் மாத்திரம் காணப்படுவது இவ்வொற்றுமைக்குச் சிறந்த சான்றாகும். இதனால் தமிழ் நாட்டை ஒத்த மக்களே இலங்கையில் வாழ்ந்ததாக கருதப்படுகிறது. தென்னிந்தியாவில், இவர்களை ஆதிஒஸ்ரலோயிட் என இவ்வர்க்கத்தினர் அழைக்கப்பட்டதால் இலங்கையில் வாழ்ந்த இம்மக்களையும் அவ்வாறு அழைக்கலாம். இலங்கையில் இன்று வாழ்ந்துவரும் வேடர்கள் இம்மக்கள் வழிவந்தவர்களாக கருதப்படுகிறது. மகாவம்சத்தில் விஜயன் வந்தபோது இங்கு வாழ்ந்தவர்கள் நாகரீக மற்ற இயக்கர், நாகர் என்பது இம்மக்களையே குறிப்பதாக தொல்லியலாளர் கருதுகின்றனர்.

இப்பண்பாட்டை அடுத்து இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் திராவிட மக்களிற்குரிய பெருங்காலப் பண்பாடு (Megalithic Culture) காணப்படுகிறது, தென்னிந்தியாவில் கி. மு. 1000 அளவில் தோன்றிய இப்பண்பாடு இலங்கையில் கி. மு 700 அளவில் பரவியிருக்கலாம். எனக் கருதப்படுகிறது. பெருங்கற்காலப் பண்பாடு என்பது சிறந்த மனிதரோடு தொடர்புடைய பல்வகைப்பட்ட சவ அடக்கமுறையுடன் சம்பந்தப்பட்டதாகும். இலங்கையில் இப்பண்பாடு அநுராதபுரம், தம்புல்லை, மாந்தை (மன்னார்) திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளத்தில் பொம்பரிப்பு, யாழ் மாவட்டத்தில் கந்தரோடை, ஆனைக்கோட்டை, காரைநகர், வல்லிபுரம் போன்ற இடங்களில் இருந்ததற்கான சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இப்பண்பாட்டுடன் தான் அரச தோற்றம், நகரமயமாக்கம், பண்படுத்தப்பட்ட மொழி, நீர்ப்பாசனம், விவசாயம் இரும்பின் உபயோகம், மந்தை வளர்ப்பு, கறுப்பு, சிவப்பு மட்பாண்டங்கள் என்பன அறிமுகமாயின. ஆரியர் குடியேற்றம் நடந்ததெனக் கூறுவோர் அவர்களுடன் தான் இப்பண்பாடு தோன்றியதாகக் கருதினர். ஆனால் அதற்கான எதுவித தொல்பொருட் சான்றுகளும் காணப்படவில்லை. மாறாகத் தென்னிந்திய திராவிட மக்களது பெருங்கற்காலப் பண்பாட்டுடன் இலங்கை நாகரீகம் தோற்றம் பெற்றதிற்கு ஈழத்தில் பரவலா[illegible] சான்றுகள் காணப்படுகின்றன,

அண்மையில் இப் பண்பாட்டுக்குரிய மக்களது எலும்புக்கூடுகளை மானிடவியல் ரீதியாக ஆய்வு செய்த பேராசிரியர் கெனடி சண்முகநாதன் போன்றோர் இவர்களும் தென்னிந்தியப் பெருங்கற் கால பண்பாட்டு மக்களும் ஒரே இன வர்க்கத்தைச் சார்ந்தவர்கள் எனக் குறிப்பிட்டனர். சமீபத்தில் சிங்கள மக்களின் இரத்தத்தை வட இந்தியாவிலுள்ள பஞ்சாப், அசாம், வங்காளம் மக்களின் இரத்தத்துடன் தொடர்புபடுத்தி ஆராய்ந்த கலாநிதி சென் (Sen) என்பவர் இவர்களிற்கு இடை எதுவித இரத்தத் தொடர்பும் இல்லை எனவும், மாறாக தென்னிந்தியாவிலுள்ள கேரளம், தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேச மக்களுடன் நெருங்கிய தொடர்பு உண்டு எனக் கூறியமை இக்கருத்தை மேலும் உறுதிப்படுத்த உதவுகிறது. இதனால் இன்றைய சிங்கள மக்களின் மூதாதையினர் தென்னிந்திய திராவிட மக்களின் வழிவந்தவர் என்ற கருத்து உண்மையாகிறது. இதிலும் இலங்கையின் இடைக்கற்கால, பெருங்கற்கால பண்பாடு, தமிழ்நாட்டுடன் ஒரே பிராந்தியமாக இணைந்து காணப்படுவதால் ஈழத்தின்

ஆதிக்குடிகள் அங்கிருந்தே அதிகமாக வந்தனர் எனக் கருத இடமுண்டு.

இலங்கையில் இப் பண்பாடு மலர்ச்சியடைந்த கட்டத்தில் பௌத்த மதம் அறிமுகப்படுத்தப்பட்டமை புதிய பண்பாடு இலங்கையில் தோற்றம்பெற வழிவகுத்தது. இது புதிய மதத்தின் வருகையை மட்டும் குறித்து நிற்கவில்லை. புதிய பௌத்த சிங்களப் பண்பாட்டின் தோற்றத்தைக் குறித்து நின்றது. வட இந்தியாவில் இம் மதம் எழுச்சி அடைந்த கட்டத்தில் இது இலங்கையில் பரவியதினுல், இக் காலப் பகுதியில் இருந்து இலங்கை வரலாற்றை வட இந்தியாவுடன் தொடர்புபடுத்தும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆயினும் சமகாலத்தில் ஆந்திராவிலும் தமிழ்நாட்டிலும் இது நன்கு வளர்ச்சி அடைந்து அங்கிருந்தே இம்மதம் இலங்கைக்கு பரவியதற்கு அதிக சான்றுகள் உண்டு. ஆயினும் இம்மதத்துடன் பரவிய பாளி, பிராகிருத மொழிகள் இங்கிருந்த திராவிட 'எலு' மொழியுடன் கலந்ததால் சிங்கள மொழி புதிதாகத் தோற்றம் பெற்றது. இச்சிங்கள மொழியில் வடமொழிச் சொற்களின் செறிவு அதிகம் காணப்பட்டாலும் அதை வடமொழிக் குடும்பத்தைச் சார்ந்ததெனக் கூறமுடியாது. மாருகத் தமிழைப் போன்று திராவிடமொழிக் குடும்பத்தையே சார்ந்தது. இதனுல்தான் சில அறிஞர்கள் சிங்கள மொழி, தமிழ் மொழியின் பிள்ளை என்றனர். ஆயினும் பௌத்த மதம் தீவிரமாகப் பரவியதால் முற்பட்ட திராவிடப் பண்பாடு இவற்ருல் உள்வாங்கப்பட்டு புதிய பௌத்த சிங்களப் பண்பாடும் இலங்கையில் வளர்ச்சிபெற முடிந்தது. இதனுல் பௌத்த மதம் பரவும்வரை தென்னிந்திய இனமாக தென்னிந்தியப் பண்பாட்டைப் பின்பற்றியவர்கள் பௌத்தம் பரவியதன் பின்னர் மொழிரீதியாக தமிழ், சிங்களச் சமூக அமைப்பு உருவாக வழியேற்பட்டது. இதில் பெரும்பான்மையான மக்கள் பௌத்தத்தைப் பின்பற்றினுலும் முற்ருகத் தென்னிந்தியப் பண்பாட்டை புறக்கணிக்கவில்லை; அவை தொடர்ந்தும் பௌத்த பண்பாட்டுடன் இணைந்து வளர்ந்தன என்பதற்குப் பௌத்த சாதனங்களிலே வரும் தென்னிந்திய வரிவடிவங்களும், பல தமிழ்ப் பெயர்களும் சான்ருகும்.

எனவே இன்றைய தமிழ், சிங்கள மக்களின் மூதாதையினரும், அவர்களின் மொழிகளும், இலங்கை நாகரீகத்தின் தோற்றமும் தென்னிந்தியப் பின்னணியில் ஏற்பட்டதினுல் பாடநூல்களில் இடம்பெறும் ஆதிக்குடிகள் பற்றிய கருத்துக்கள் மறுபரிசீலனை செய்யப்பட்டு புதிய கருத்துக்களை இடம்பெறச் செய்யவேண்டும். அதற்கு மாருக மகாவம்சத்தில் இடம்பெற்ற கட்டுக்கதைகளிற்கு முக்கியத்துவம் கொடுப்பது மகாவம்ச ஆசிரியரால் உருவாக்கப்பட்ட இன மத உணர்வுகளை வளர்ப்பதோடு இளம் பிராயத்திலேயே மாணவர்களிற்கு உண்மைக்கு மாருக வரலாற்றுக் கதைகளைப் போதிப்பதற்கு ஊக்கம் கொடுப்பதாக அமையும்.

பரமு புஷ்பரட்ணம்
விரிவுரையாளர்
யாழ் பல்கலைக்கழகம்

# புலக்காட்சி மூலம் எண்ணக்கருவாக்கம்

சிந்தித்தல் எனும் உளச்செயல் வழியாக அறிவு வளர்ச்சியடைகிறது. சிந்தித்தலின் முதற்படி புலக்காட்சியாகும். புலன் காட்சியென்பது ஒருவன் தனக்கு எதிரேயுள்ள பொருட்களைப் பார்த்து அவைபற்றிச் சிந்திப்பதாகும். புலக்காட்சிவழியே தான் வெளியிலுள்ள பொருட்களின் இயல்பு பற்றிய அறிவைப் பெறமுடிகிறது. கற்றலுக்கும், ஆய்தலுக்கும், கற்பனைக்கும் அடிப்படையாகப் புலக்காட்சி அமைகின்றது புலக்காட்சி புலனுணர்ச்சிகளினின்று எழுகிறது. நமதுபுலன்களான கண், காது முதலியவற்றைக் கொண்டு புலன் உணர்ச்சி பெறுகிறோம். உரு, நிறம், ஒலி, சுவை போன்றன புலனுணர்ச்சிகளாகும். இந்தப் புலனுணர்ச்சிகட்குத் தகுந்த பொருளை நமது உள்ளம் அவற்றின் மீது சுமத்துவதன் விளைவே புலக்காட்சியாகும். உதாரணமாக ஓர் தோடம்பழம் நம்முன்னே உள்ளது. அதனைப் புலக்காட்சி மூலம் அறிகின்றோம் இது எவ்வாறு நிகழ்கிறதெனில் கண்ணால் பெறப்பட்ட மஞ்சள் நிறம், உருண்டை வடிவம், நுகர்வில் பெறப்பட்ட மணம் ஒன்று சேர்ந்து எமது உள்ளத்தில் குறிப்பிட்ட பொருளைக் குறிக்கும் முழுமையான கருத்தை உருவாக்குகிறது. ஆனால் இவையிரண்டையும் பிரித்தறிய முடியாது புலனுணர்ச்சி நம் உள்ளத்தில் புகும் கணமே அதுபொருள் கொண்டு புலக்காட்சியாகிறது

புலன் காட்சிகள் மூலம் மாணவன் ஒருவன் திருந்திய அறிவைப் பெறலாம். அதற்கு அவனது புலன்களினின்றும் பெறப்படும் புலனுணர்ச்சி தெளிவானது ஆகவும் திருத்தமானதாகவும் இருக்க வேண்டும். புலன் உணர்ச்சிக்கு உள்ளம் அளிக்கும் பொருள் விளக்கம் உண்மை நிலைக்கு ஒத்ததாக அமைய வேண்டும். எமது புலன் வழியாகச் சூழலை அறியும் செயல்முறை அவதானம் எனப்படும். சூழலின் எல்லாப் பொருளும் புலக்காட்சி பெறுவதில்லை. எப்பொருளில் எமது கவனம் ஈர்க்கப்படுகிறதோ அப்பொருளே புலக்காட்சி பெறும். கெஸ்ரால்ட் உளவியலாளரின் படி தூண்டிகள் மனிதனது புலன்களைத் தாக்கும் போது அவன் புலனுணர்ச்சி பெறுகிறான். அப்புலனுணர்வைக் கொண்டு பொருட்கள் பற்றிய விளக்கம் பெறுதல் புலக்காட்சி எனப்படும். அது முழுமை பெற்றிருத்தல் வேண்டும் என்கின்றனர். முக்கிய புலனுணர்ச்சிகளுக்கு மனித உள்ளம் ஓர் ஒழுங்கான அமைப்பைக் கொடுக்கின்றது. என்பதே இவர்கள் கோட்பாடாகும். எமது உள்ளம் புலனுணர்ச்சிகளைத் தொகுத்து அமைப்பாக்குங் கருவியாக உள்ளது. சூழலை அமைப்பாக்குதல், அதனைத் திருத்தமாக அமைப்பாக்குதல் போன்ற தொழிற்பாடுகள் எம்முள்ளத்தே நடைபெறுவதன் விளைவாக நாம் கற்கின்றோம். இவ்வாறு கற்றலை கெஸ்ரால்ட் உதவியாளர் "அகக்காட்சி பெறல்" என்கின்றனர்.

சிறுகுழந்தையின் புலன்காட்சித்திறன் குறைந்த அளவில்தான் காணப்படும். அதன் புலன்கள் முழு வளர்ச்சி பெறாத நிலையிலேயே உள்ளன. புலன் உணர்ச்சிக்குத் தகுந்த பொருள் கொள்ளத் தேவைப்படும் பின்னணி அறிவும் அனுபவமும் அதனிடம் கிடையாது. குழந்தை வளர வளர புலன் காட்சித் திறன் முதிர்ச்சியும் தெளிவும் பெறுகிறது. சின்னஞ்சிறு குழந்தையின் கண்கள், காதுகள் இயங்குவதற்கான வன்மை இருந்த போதிலும் அவை புலக் காட்சி பெறுவதில்லை சூழ்நிலைத் தூண்டலால் கண்கள் அசையலாம். அதனால் அது பார்க்கின்றது எனக் கூறமுடியாது. எல்லாவகைத் தூண்டல்களுக்கும் குழந்தை கலக்கமான அனுபவத்தைப் பெறுகின்றது. நாள் ஆகஆக அவை பொருளுள்ளனவைகளாக ஆகின்றன. ஒரு வயதான குழந்தையிலும்

புலக் காட்சி பக்குவம் அடைவதில்லை என பியாகே என்னும் உளவியலாளர் கூறுகின்றுர். குழந்தையானது சூழ்நிலைத் தூண்டலால் உண்டாக்கும் புலன் உணர்வுகளுக்கும் சூழ்நிலைத் தூண்டல்களுக்கும் உள்ள தொடர்பை அறிவதன் மூலமே புலக்காட்சி பெறுகின்றது என சென்டன் என்னும் அறிஞர் சோதனை வாயிலாக நிறுவினுர். பிறவிக் குருடர் வயது சென்று பார்வை பெற்றேரைப் பரிசோதனை செய்தார் குருடரது புலக்காட்சி தொடு உணர்வு இவற்றை அடிப்படையாகக் கொண்டது. அவர்கள் பார்வை பெற்றவுடன் அவர்களது கண்கள் பல்வேறு சூழ்நிலைப் பொருட்களால் தூண்டப்பட்டன. பார்க்க முடிந்தது. ஆனுல் என்ன பொருள் எனக்கூற முடியவில்லை. தொட்டுணர்வின் மூலம் என்ன பொருளெனக் கூறினுர்கள்.

புலன்காட்சி உருவாக்கம் மரபு வழியாக அமைகின்றதா அல்லது வாழ்க்கையில் கற்கப் படுகின்றதா என்ற பிரச்சினையும் உண்டு கெஸ்ரால்ட் உளவியலாளர்கள் இது மரபு இயல்பு எனறு கருதுகின்றுர்கள் ஆனுல் நடத்தைக் கொள்கையினர் புலக்காட்சி உருவாக்கம் சூழ்நிலைப் பயிற்சி காரணமாக உண்டாகின்றது என்கின்றனர். சில வகைப் புலக்காட்சி உருவாக்கம் மரபுவழியாகவும், வேறுசில பயிற்சிகளினுலும் அமையுமென Hepp என்னும் உளவியல் அறிஞர் கூறுகிறுர். இதற்கு இவர் மேற்கொண்ட பரிசோதனை பிறவிக் குருடர் பிற்காலத்தில் பார்வைபெற்றவர்களையும் சிம்மான்ஸி எனும் மனிதக் குரங்குகளையும் ஆராய்ந்ததே பொருட்களைப் பின்னணியில் இருந்து பிரித்தறிவது மரபுவழி எனவும் புலக்காட்சி உருவாக்கத்தின் மற்றப் போக்குகள் பயிற்சி காரணமெனவும் கண்டார்.

பயிற்சியின் காரணமாக ஏற்படும் புலக்காட்சி ஒருவரிடம் அவரையுமறியாமல் உருவாகிறது சூழ்நிலைப் பொருட்கள் (ரெடினுவில்) விப்பங்களாகப் படியும் போது தலைகீழாகவே விழும். எமக்கு அப்பொருள் செங்குத்தாக இருப்பது போலப் புலக்காட்சி அமையும். இதை மாற்றியமைக்க ஸ்ராட்டன் என்பவர் தன் கண்களில் ஒரு வில்லையைப் பொருத்தினுர் இப்போ மக்களும், பொருட்களும் தலைகீழாகத் தெரிந்தனர். முதலில் வாந்தி எடுப்பது போல் உணர்ந்தார். பின் எளிதான செயல்களைச் செய்யச் சிரமப் பட்டார் நாளாக எல்லாச் செயல்களிலும் இயல்பாக ஈடுபட அவரால் முடிந்தது. அவரது புலக்காட்சிக்கு ஏற்ப நரம்புகளும் தசைகளும் இயங்கப் பயிற்றப் பட்டன.

புலக்காட்சிக்கு முக்கியமானது முழுமைப் படுத்தும் போக்காகும். முக்கோண உருவத்தில் ஒருபகுதி விட்டிருந்தாலும் அதை முக்கோணமாக புலக்காட்சி பெறுகிறேம். இதை இயற்கை வழியென கெஸ்ரால்ட் கொள்கையினர் கருதுகின்றனர். இது மாணவனுக்குக் கற்பித்தலில் முன் பாடத் தொடர்பு படுத்திக் கற்பிப்பதால் புலக்காட்சி பெற வைக்கும். பாலர் பாடசாலைப் பிள்ளையானுல் புலப்பயிற்சி மூலம் கற்பித்தல் வேண்டும வயது முதிர மாணவன் பெற்ற பயிற்சியனுபவத்தால் புலக்காட்சி பெறுவான். புலப்பயிற்சியே குழந்தைக் கல்வியின் அடிப்படையாக அமைய வேண்டும் என றூலோ, பெஸ்டளாசி, பிராபெல் மொண்டிசூரி போன்ற பல கல்வியாளர்கள் வலியுறுத்துகின்றனர், மன்டிசூரி அம்மையாரால் கண்டு பிடிக்கப்பட்ட பல வகைக் கற்பித்தல் கருவிகள் புலப்பயிற்சிக்கு ஏற்றவை. இக்கருவிகள் மூலம் குழந்தை பொருளின் பருமன், வடிவம், நிறம் என்பவற்றைத் தன் புலன்களால் அறியும் பயிற்சியைப் பெறுகிறது இவ்வாறு ஒலிகளின் வேறுபாடறிதல், தொட்டுணர்தல் என்பன மூலமும் பயிற்றலாம் இது பிள்ளையிடம் உற்று நோக்கும் திறனை வளர்க்கிறது. புலப்பயிற்சி மூலம் அழகுணர்ச்சியையும் பிள்ளையிடம் வளர்க்கலாம். கைவேலை, சித்திரம் என்பவற்றைப் போதிப்பதன் மூலம் இதைப் பெறுவர். பாடசாலைக் கல்வியிலும் புலப்பயிற்சி அளிக்க வாய்ப்பு உள்ளது.

ஆதாரக் கல்வி முறையில் இத்தகைய இயல்பான பயிற்சிக்கு வாய்ப்பு ஏற்படுத்த ஆசிரியரால் முடியும். செய்முறைப் பாடங்களில் மாணவன் பயிற்சி பெறும் போதும், சுற்றுப் பயணங்களின் போதும், கல்விக் கண்காட்சிகளைக் காணும் போதும் அவன் பெறும் அனுபவங்கள் புதிய புலக்காட்சிகளை அளிக்கும். முன்பு நினைத்திருந்த அனுபவங்களைப் பிழையென நிரூபிக்கவும் கூடும். இதனால் மாணவன் தானே அறிந்து திருத்திக் கொள்வான்.

மாணவன் பல சந்தர்ப்பங்களில் பரந்த அறிவு பெருமலிருக்கக் காரணம் உற்று நோக்கும் தன்மை குறைவினாலாகும். ஆசிரியர் ஆர்வத்தைத் தூண்டி விட்டும் ஒரு சம்பவம் பற்றிய பின்னணி அறிவை அளித்தும் விட மாணவன் விடயங்களைக் கருத்தூன்றிக் கவனித்துத் தெளிவான காட்சி பெறுவான். இது இடைநிலைப் பாடசாலைகளிலும் ஆரம்பப் பாடசாலைகளிலும் பின்பற்ற வேண்டியதொன்று.

உற்றுநோக்கலில் மாணவனது இயல்பறிந்து கற்பிக்கும் போது விளக்கப்படங்கள், திரைப்படங்கள், சுற்றுலாக்கள் பயன்படுத்தினல் மாணவனது அறிவு விருத்தியாகும். மாணவனது புலக்காட்சித் திறன் முதிர, தெளிவு பெறுகிறன். புலக்காட்சித் திறனுடன் இணைந்து அறிவு வளர்ச்சியடைகிறது. ஆகவே மாணவனது அறிவும் அனுபவமும் விரிவடைய உதவும் முறைகளைப் பயன்படுத்திப் புலக்காட்சி பெற உதவினல் அவன் திடமான எண்ணக் கருவைப் பெறலாம்.

(திருமதி ம. லோகேஸ்வரன்)

# அர்த்தமுள்ள சோமஸ்கந்தர்

கல்வித்துறையில் உயர்பதவிகளை வகித்து ஒய்வு பெற்றிருக்கும் இவ்வேளையில் சோமஸ்கந்தன் இன்னருள் பற்றி யான் கட்டுரை வரைவது யார்க்கும் வியப்பாக இருக்காது. ஓய்வு பெற்ற காலத்தில் தான் தத்துவ சமய சார்பானவராகப் பலர் மாறுவதாகப் பொதுவாகப் பேசிக் கொள்வார்கள் ஆனல் என்னைப் பொறுத்தவரை பதவியிலிருந்த போதும் அதற்கு முன்பும் பின்பும் இறை நினைப்பு உள்ளத்தினடி மட்டத்திலிருந்து என் செயற்பாடுகட்கு வழிகாட்டி வந்திருக்கின்றது சைவப்பெரியாரன அறவள்ளல் அமரர் மழவராயர் கந்தையாவின் அரன் ஆலயத்தையும் சோமஸ்கந்தா அறிவாலயத்தையும் தொடர்ந்து பரிபாலிக்கும் வேளைகளில் திருவிழாக்களிலும் சமய நிகழ்ச்சிகளிலும் கலந்து சிறப்புற நடாத்த வேண்டியிருந்தது. தூய உள்ளன்போடு எம்பெருமான் கருணை கடாட்சத்தை சிந்திக்கின்ற வேளைகளில் உள்ளம் நெக்குருக உடல் புளகாங்கிதம் அடைந்து மெய் சிலிர்க்கின்றது.

இன்றைய நாளில் துர்க்கை வழிபாடு பிரபல்யம் பெற்று வருகிறது. சக்தியின் ஓர் அங்கமான துர்க்கா தேவியாலயங்களில் செவ்வாய் வெள்ளிக் கிழமைகளில் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிகின்றது. கிருஷ்ணர் முருகன் ஆகியோரும் கலியுகத் தெய்வங்களால் போற்றப்பட்டு வருகிறர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் கிருஷ்ணர் கோவில்களும் வெள்ளிக்கிழமைகளில் முருகன் கோவில்களும் சனக்கூட்டத்தின் ஆரவாரத்தாலும் பக்திப் பிராவகத்தாலும் நிறைந்திருப்பதை நாம் அவதானிக்கலாம்.

அர்த்தமுள்ள சோமஸ்கந்த மூர்த்தத்தில் சக்தி முருகன் ஆகிய இருவரும் எம் சமயத்தின் முழு முதற்தெய்வமான எம் பெருமானோடு ஒருங்கே வீற்றிருக்கும் அருட் கோலத்தைக் காணலாம். சிவன் கோவில்களுள் உள்ள மூர்த்திகளுள் ஸ்ரீசோமஸ்கந்த மூர்த்தியாகிய ஸ்ரீ தியாகராஜ மூர்த்தத்தை– விசேடமாக வணங்குவது வழக்கம். சோமஸ்கந்த மூர்த்தி என்று சொன்னால் (ச + 2 மா + ஸ்கந்த சிவபிரான் உமா தேவியுடனும், ஸ்கந்தப் பெருமானுடனும் எழுந்தருளிய மூர்த்தமென்று அர்த்தம் கொள்வர். சோமஸ்கந்த மூர்த்தத்தில் சிவன் முருகன் தேவி உருவங்களை ஒருங்கே காணப்பெறலாம். அதி சூக்கும பஞ்சாட்சரத்துக்கு மூர்த்தம் ஸ்ரீசோமஸ்கந்த மூர்த்தியேயாம். தூய பஞ்சாட்சரத்தை இம்மையில் பயன்பெறவும் அதி சூக்கும பஞ்சாட்சரத்தை நிட்டை கூடவும் சைவமக்கள் ஜபம் செய்வார்கள். புத்தூர் சிவன் கோவிலைத் தாபித்த அமரர் மழவராயர் கந்தையா அதன் முன்னால் தன்னால் தாபிக்கப்பட்ட வித்தியாலயத்திற்கு ஸ்ரீசோமஸ்கந்தன் எனப்பெயரிட்டு சிவன் ஆலயத்துடனும் இணைந்து செயற்பட வழிவகுத்தார். அவரால் எழுதப்பட்ட தர்மசாதனத்தை உற்று நோக்குங்கால் சமயத்தோடு இணைந்த கல்வியையே எதிர்காலச்சந்ததியினர் பெற வேண்டும் என அவர் வேணவாக் கொண்டது தெரியவரும் ஸ்ரீசோமஸ்கந்த வித்தியாலயத்தின் அறக்கட்டளையில் அவர் குறிப்பிட்டுள்ள விடயங்களை இந்தக் கல்லூரியோடு தொடர்புடைய மாணவர் ஆசிரியர் பெற்றோர் நலன் விரும்பிகள் யாவரும் அறிந்திருத்தல் அவசியமாகும் அதன் சிலபகுதிகள் வருமாறு.

உலக நன்மையின் பொருட்டு என்னால் தாபனஞ் செய்யப்பட்டிருக்கும் வித்தியாலயத்தில் பின்னாற் காட்டப்படும் காரியங்கள் நடைபெற்றுவர வேண்டியன என்றும் தீர்மானித்து; அவைகளைச் சொல்லப்பட்ட தில்லை நாதரும் பொன்னம்பலமும் எனக்கும் என் சந்ததியினரும் பின் ஒழுங்காகச் செய்து வருவார்கள் என்னும் நம்பிக்கையும் முகாந்திரமாகவும்; ரூபா 90, 500/- பெறுமதியுள்ளனவும் பின்னாற் காட்டப்படும் ஆதனவடைப்பிற் சொல்லப்படுவனவுமான ஆதனங்களையும் அதன் சேர்மானங்களையும் மேற்குறித்த சோமஸ்கந்த வித்தியாலயத்தின் நயத்திற்கு இத்தால் தரும சாதனஞ் செய்து கையளித்து ஒப்படைத்துவிடுகிறேன்.

குறித்த வித்தியாலயத்தில் நடைபெற வேண்டிய கிரியைகள் விதானங்களாவன:

குறித்த வித்தியாலயத்திலமைக்கப்பட்டிருக்கும் சோமஸ்கந்தர் முதலான தேவர்கட்கு நாடோறும் இருகாலப் பூசை கிரமந் தவறாது நடைபெற்று வரவேண்டியது.

சோமஸ்கந்த வித்தியாலயம் பிரதிட்டை செய்யப்பட்ட தினமாகிய தை மாதத்து அத்த நட்சத்திரம் வரும் தினங்களிலும்; வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கத்தொடங்கிய தினமாகிய சித்திரை மாதப் பூர்வபக்கப் பஞ்சமித் திதிகளிலும் வித்தியாலயத்தில் எழுந்தருளியிருக்கும் சோமஸ்கந்தர் முதலான தெய்வங்களுக்கும் விசுவநாத சுவாமி கோவிலில் எழுந்தருளியிருக்கும் சோமஸ்கந்தமூர்த்தியை வித்தியாலயத்திற்கு எழுந்தருளச் செய்து அவருக்கு விசேட பூசையும் அன்னதானமும் கிரமந் தவறாது செய்து வரவேண்டியது. இவ் வித்தியாலயத்தில் 63 நாயன்மாருடையதும் மாணிக்கவாசக சுவாமிகளுடையதும் குருபூசைகள் அவர்களுடைய சரித்திரப் பிரசங்கத்துடன் நடைபெறவேண்டியது. அப்பூசைகளில் நிவேதிக்கப்படும் பொங்கல் பட்சணம் பழம் முதலானவைகள் பிரதானமாக உபாத்தியாயர்களுக்கும் பிள்ளைகட்கும் வழங்கப்படவேண்டியது. மேலே சொல்லப்பட்ட பூசைகள் ஒவ்வொன்றிலும் விசுவநாதசுவாமி கோவிலில் நடைபெறும் உற்சவ தினங்களிலும்; நாடோறும் வித்தியாலயத்தில் கல்வி கற்கத் தொடங்கும் போதும் முடியும்போதும் சிவநாம பாராயணமும் தேவார பாராயணமும் தவறாது அவ்வத் தினத்துக்குரியதான கால அளவுக்கு நடைபெற்றுவரவேண்டியது.

இவ்வாறு தாபகரால் ஏற்பாடு செய்யப்பட்ட தர்மகர்த்தா சபை உறுப்பினராயும், தலைவராயும் பலகாலம் தொழிற்பட்டுவந்த யான், ஸ்ரீசோமஸ்கந்தப் பெருமானின் கருணையைப் பல சந்தர்ப்பங்களில் நேரடியாக வாழ்க்கை அனுபவத்தில் கண்டிருக்கின்றேன். தென்னகத்துத் தமிழ்த் திரைப்பட உலகின் முடிசூடா கவிஞனாகவும் தமிழ்நாட்டரசின் ஆஸ்தான கவிஞனாகவும் விளங்கிய காலஞ்சென்ற கவிஞர் கண்ணதாசன் தனது வாழ்க்கை அனுபவங்களையெல்லாம் அர்த்தமுள்ள இந்துமதம் என்ற நூலில் அழகாக நயம்பட இந்து மதத் தத்துவங்களை விளக்கிவைக்கும் வகையில் வெகு சிறப்பாக அர்த்தமுள்ள இந்து மதம் என்ற நூலை எழுதிப் போந்தார். அதேபோல எனது வாழ்க்கை அனுபவங்களையும் ஸ்ரீ சோமஸ்கந்தன் இன்னருளையும் சிந்தித்துச் சிந்தித்து எழுதப் போனால் இக் கட்டுரை ஒரு காவியமாக அல்லது ஒரு தொடர்கதையாக நீண்டுவிடும் எனினும் ஒரு அனுபவத்தைக் கூறி இக் கட்டுரையை முடிக்க விளைகின்றேன்.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி திரு. சு. குமாரசாமி அதிபர் கடமையாற்றிய மிகச் சமீபகாலம் வரை புத்தூர் பெருமக்களின் ஏகபோகச் சொத்தாக அதாவது தீண்டாதரைத் தீண்டாது இருந்து வந்தது. இதுபற்றிய சில முறைப்பாடுகளும் கல்வி இலாகாவின் உயர் பதவியிலிருந்த என்னை வந்து சேர்ந்தது. கல்லூரித் தர்மகர்த்தா சபை உறுப்பினராய் இருக்கும் நானும் மறைமுகமாக அதற்குடந்தையாக இருப்பதாகப் பலத்த சந்தேகமும் கிளப்பப்பட்டது. ஆனால் அடியேன் சித்தம்போக்கு சிவம்போக்கு எம் பெருமானாகிய சோமஸ்கந்தன் என்னிலை அறிவான். அவனிருக்கப் பயம் ஏன் என்று இருந்தேன். இச்சமயத்தில் கொழும்பு இந்துக் கோவில் ஒன்றில் ஒரு தமிழ்நாட்டு சைவப்பெரியாரின் கதாப் பிரசங்கம் இடம் பெற்றது.

திருத் தொண்டிலே சிறந்த மாறனார் வீதி வழியே சென்ற சுவாமி ஊர்வலத்திலே கலந்து விட்டு வீடுதிரும்பினார். வீட்டின் உள்ளே செல்லாமல் வெளிவிருந்தை ஓரமா நின்று மனைவியாரைக் குளிப்பதற்கு வென்னீர் ஆயத்தம் செய்யும்படி கூறினார். பல சாதிமக்களும் கலந்து கொண்ட ஊர்வலத்தில் துடக்கு ஏற்பட்டு இருக்குமாதலால் குளித்த பின்பே சிவபூசை செய்யக் கருதினார். களைமிகுதியால் சற்றுத் தூங்கிய நாயனார் ஒரு குட்டிக் கனவு கண்டார்.

எம்பெருமான் தோன்றி பக்தனே நாம் படைத்த மனிதருள் உயர்வு தாழ்வு கிடையாதென்ற உண்மையை எடுத்துரைத்தார். திடுக்கிட்டுக் கண்விழித்த நாயனார் தான் கண்ட கனவை மனைவிக்கு எடுத்துக் கூறி கால் முகம் அலம்பிக் கொண்டு மிகுந்த பயபக்தியோடு சிவபூசை செய்தார். இப்பிரசங்கத்தை வெகு அந்புதமாக கதாப்பிரசங்கியார் எடுத்துரைத்தது அப்போதைய மனநிலையில் என் உள்ளத்தில் பசுமரத்தாணி போற்பதிந்தது. மறு வாரத்தில் யான் யாழ்ப்பாணம் வந்தபோது புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாவில் நடைபெற்ற விழாவொன்றிலே கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்ட போது இக்கதையை எடுத்துக் கூறினேன், தியாகராஜ மூர்த்தமாகிய கருணைத் தெய்வம் குடிகொண்ட சோமஸ்கந்தாவில் சமுதாயத்திலுள்ள அனைவரும் சமத்துவத்துடன் கவனிக்கப்பட வேண்டும் என எடுத்துக் கூறியதோடு அமையாது அந்த வார்த்தையிலேயே அவர்களிற் பலர் கல்லூரியில் சேர்வதற்கும் நான் முன்னின்று ஏற்பாடுகளைச் செய்தேன். எம்பெருமானுடைய கருணை கடாட்சம் தான் என்னை அவ்வாறு செயற்படத் தூண்டியதென இப்போது உணர்கிறேன்.

ஸ்ரீ சோமஸ்கந்தப் பெருமானின் கருணை காடட்சத்தை அடியேன் பெற்றது போல இன்னும் பலர் பெற்று வாழ்வில் மேன்மையடைந்திருக்கிறார்கள். யான் சோமஸ்கந்தாக் கல்லூரி மாணவனாக, முகாமையாளராக, அறங்காவலராக, வட்டரக்கல்வியதிகாரியாக (அப்போது கல்விப்பரிசோதகர்) கிளிநொச்சி, மன்னார். வவுனியா, முல்லைத்தீவுப் பிரதேசங்களை உள்ளடக்கிய

வடமாநில கல்வி அதிபராக வாழ்க்கையில் உயர்வு சிறப்புக்கள் பெற எம்பெருமான் கருணை கடாட்சம் உதவியது போல; மேலும் சிலர் வாழ்வில் உயர் பதவிகளைப் படிப்படியாகப் பெற்றுயர்ந்திருக்கின்றார்கள். புத்தூர் மேற்கைச் சேர்ந்த தம்பி ஐயாத்துரை இரங்கநாதன் இக்கல்லூரி மாணவனாக ஆசிரியராக, பட்டயக் கணக்காளராக படிப் படியாக உயர்ந்து இன்று நியூயார்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் தலைமைச் செயலகத்தில் நிதி ஆலோசகராகப் பணிபுரிகிறார். அச்சுவேலியைச் சேர்ந்த திரு. கே. சண்முகலிங்கம் கல்லூரிப் பழைய மாணவன். இலங்கை நிர்வாக சேவையில் S. L. A. S பதவி உயர்ந்து திட்டமிடல் அமைச்சின் நிரந்தரச் செயலாளராகி இன்று வெளிநாட்டில் உயர் பதவி வகிக்கின்றார். சோமஸ்கந்தப் பெருமான் இன்னருளால் சமூகத்தில் இன்னும் எத்தனையோ பேர்கள் உன்னத நிலை அடைந்திருக்கிறார்கள். சிறுப்பிட்டி பட்டயக் கணக்காளர் செல்லையா; நவற்கிரி கலாநிதி குணசிங்கம், நீர்வேலி கலாநிதி விநாயகலிங்கம், ஆவரங்கால் கலாநிதி இலகுப்பிள்ளை ஆகியோரைக் குறிப்பிடலாம். இன்னும் எத்தனையோ வைத்தியர்கள் பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், எனச்சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் கற்றோர் கூட்டம் 1931 ஆம் ஆண்டின் பின் உருவாகியிருக்கின்றது. இவர்களை சந்தித்து வாழ்வில் உயர்வு பெற கல்லூரி அளித்த பங்கினையும் சோமஸ்கந்தப் பெருமானின் கருணை கடாச்சத்தையும் உசாவியறிந்து ஒரு நூலாகவே தொகுத்து வெளியிடலாம். உற்சாகமும் எழுத்தாற்றலும் சமூகத்தின் பலமட்டத் தினருடனும் பழகும் வாய்ப்பு முன்னர் ஒரு பழைய மாணவர் இக்கைங்கரியத்தை மேற்கொள்வது மிகப்பொருத்தமானது எதிர்கால மாணவ சமுதாயத்திற்கு இத்தகைய நூல் ஓர் அரிய பொக்கிஷமாகும்.

1988ஆம் வருடத்தில் தாபகர் ஜனன தினமான செப்டெம்பர் 10ஆம் திகதி கொண்டாடப்படும் தாபகர் தினத்திலும் பரிசளிப்பு விழாக் கொண்டாட்டத்திலும் வெளியிடவிருக்கும் கல்லூரிச் சஞ்சிகைக்கு எனது கட்டுரை ஒன்றையும் விரும்பி வந்தமைக்காகக் கல்லூரி அதிபர் திரு. நா. கணேசபிள்ளைக்கும், இது தொடர்பாக என்னுடன் கலந்துரையாடிய ஆசிரியர் திரு. சு. மழவராயர், திரு. செ. விஸ்வலிங்கம் ஆகியோருக்கும் எனது நன்றியறிதலையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்வதோடு இதுபோன்ற முயற்சிகள் வெற்றி பெறவும் மேன்மேலும் வளர்ச்சிபெறவும் சோமஸ் கந்தப் பெருமான் தாள் பணிந்து என் நல்லாசியைக் கூறிக்கொள்கிறேன்.

நல்ல ஆசிரியர்களாற்தான் ஒரு நல்ல சமூகத்தை உருவாக்க முடியும். நான் கல்வி அமைச்சில் கடமையாற்றிய காலத்தில் கடமையைப் புறக்கணிக்கும் ஆசிரியர்கள் மீது கண்டிப்பாக நடந்து கொண்டது மாத்திரமல்லகடமையில்கண்ணியமுள்ள உற்சாகமுள்ள ஆசிரியர்களை எப்போதும் தட்டிக் கொடுத்து பாராட்டி வந்துள்ளேன். தற்போதைய காலகட்டத்தில் தனியார் கல்வி நிறுவனங்களின் வளர்ச்சியால் கல்லூரி ஆசிரியர்கள் பற்றிப் பொதுவாகக் குறை கூறுகின்ற இவ்வேளையில் இத்தகைய முயற்சிகள் சமுதாயத்தின் நன் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ள உதவும் அத்துடன் எதிர்கால மாணவ சமூகத்தின் எழுத்தாற்றலைத் தூண்டி விடவும் பேருதவியாக அமையும்.

வாழ்க சோமஸ் கந்தா
வளர்க பெருமான் இன்னருள்

நன்றி வணக்கம்

தி. மாணிக்கவாசகர்
ஓய்வுபெற்ற உயர் கல்விப் பணிப்பாளர்

* *

# இளைப்பாறியோர்



திரு. இராஜ சண்முகரத்தினம் B. A.
அதிபர்
5-10-1981 10-02-1988



திரு. க. விஜசித்தம்பி
சிரேட்ட உதவியாளர்
11-05-1974 16-03-1988



திரு. ச. பஞ்சாட்சரநாதன்
01-01-1972 18-02-1986

நீவிர் எல்லா நலமும் பெற்று இன்பமுடன் வாழ்ந்திட
வல்லான் சோமஸ்கந்தன் இன்னருள் புரியட்டும்

# சொல்ல வந்தது ஒன்று - - சொல்லி முடித்ததோ வேறொன்று

ஒரு புள்ளி விபரத் தொகுப்பினுக்காக அல்லது மொழியியல் ஆய்வினுக்காக கவனத்துக்கு எடுக்கப்படும் இச் செய்திகள் நடுநிலை நோக்கிலிருந்து சேகரிக்கப்பட்டவை என்பதையும் தனிப்பட்ட முறையில் எந்த ஒரு பத்திரிகையையோ அல்லது பத்திரிகைகளையோ இழிவுபடுத்தும் நோக்கில் இவை சேகரிக்கப்படவில்லை என்பதையும் அழுத்தம் திருத்தமாக தெரிவித்துக் கொள்கிறார் கட்டுரையாசிரியர்.

பல சந்தர்ப்பங்களில் பத்திரிகை நிருபர் சொல்லநினைக்கின்ற செய்தி வேறொரு விதமான கருத்தில் வாசகர்களைச் சென்றடைகின்ற நிர்ப்பந்தம் செய்தித் தலைப்புகளால் ஏற்படுவதுண்டு. செய்திகளை விளக்கமாக எழுதுவதற்காக அல்லது செய்திகள் அளவை நீட்டுவதற்காக சில நிருபர்கள் செய்திக் கருத்தை முதல் பந்தியில் சொல்லிவிட்டு அடுத்த பந்தியில் அவற்றை விரிப்பார்கள். இத்தகைய சந்தர்ப்பங்களில் ஆரம்ப வசனங்களை வாசிக்கும்போது தோன்றும் கருத்து ஒன்றாகவும் தொடர்ந்து விபரமாக வாசிக்கும்போது புரிந்துகொள்ளப்படுகின்ற உண்மைச் செய்தி வேறொன்றாகவும் இருக்கின்றன.

ஒரு செய்தியாளர் தமது செய்தியைத் தெளிவாக எழுதத் தவறுவதால் இத்தகைய சிக்கல் ஏற்படுகிறது; முக்கியமாக செய்திகளுக்குத் தலைப்பு எழுதப்படும்போது செய்தியைத் தலைப்பினுள் புகுத்துவதில் தவறுவதாலும் இந்நிலை ஏற்படலாம். எது எப்படியிருப்பினும் செய்திகளைக் கருத்துத் தெளிவுடன் வழங்கவேண்டியது பத்திரிகைகளின் கடமை.

வாசகர்கள் பலரும் அவசரமாக செய்தித்தலைப்புகளை மட்டும் பார்த்துவிட்டு ஓடுபவர்களாக இருக்கிறார்கள். படிப்பறிவு குறைந்தபலர் பத்திரிகைச் செய்திகளை ஆவலுடன் படிப்பவர்களாக இருக்கிறார்கள். எனவே, சொல்ல வந்த செய்தி சரியாகவும் தெளிவாகவும் வாசகர்களிடம் சென்றடைவதற்கு, செய்திகளும் தலைப்புகளும் கவனமாக அமைக்கப்படுவது அவசியம்.

இன்று ஈழத்தில் தமிழ்ப் பத்திரிகைகளுக்குக் குறைவில்லை. இவையனைத்தும் போட்டி போட்டுக்கொண்டு வாசகர்களுக்குத் தகவல்களை வாரிவழங்குகின்றன. இவற்றில் சில நாளிதழ்களில் அவ்வப்போது வெளிவந்த செய்திகள் சிலவற்றை வாசித்தபோது ஏற்பட்ட மனப்பதிவுகள் இக் கட்டுரைகளில் தொகுத்து வழங்கப்படுகின்றன.

இக் கட்டுரையில் எடுத்தாளப்படும் பல செய்திகள் கருத்துத் தெளிவின்றியும் தமிழ்ப் பிழைகள் மலிந்தவையாகவும் அமைவதோடு சில செய்திகள் அல்லது செய்தித் தலைப்புகள் நேர்மாறான கருத்துக்களைத் தருபவை

யாகவும் உள்ளதை நேயர்கள் அவதானிக் கலாம். தமிழபிமானிகளுக்கு இது வேதனை தருவதாகவும் அதே நேரம் ஒரு நகைச்சுவை விருந்தாகவும் அமைகிறது.

இன்னொரு முக்கிய செய்தியையும் வாசகர்களுக்குத் தரவேண்டியுள்ளது இங்கு தரப்படும் செய்திகளனைத்தும் தமிழ் மண்ணுகிய குடாநாட்டிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் காணப்பட்டவையே. கொழும்புப் பத்திரிகைகளில் இத்தகைய தமிழ்ப்பிழைகள் காணப்படுவதுமிகக்குறைவு என்பதையும் தமிழர்களால் தமிழர்களுக்காகத் தமிழ்மண்ணிலிருந்து வெளியிடப்படும் தமிழ்ப் பத்திரிகைகளில்தான் தமிழ்ப் பிழைகள் மலிந்திருக்கின்றன என்பதையும் வேதனையோடு குறிப்பிடவேண்டியுள்ளது.

ஒரு புள்ளிவிபரத் தொகுப்பிற்காக அல்லது மொழியியல் ஆய்வுக்காக கவனத்திற்கு எடுக்கப்படும் இச் செய்திகள் நடுநிலை நோக்கிலிருந்து சேகரிக்கப்பட்டவையே. எந்த ஒரு பத்திரிகையையோ அல்லது பத்திரிகைகளையோ தனிப்பட்ட முறையில் இழிவுபடுத்தும் நோக்கில் இவை சேகரிக்கப்படவில்லை எனவே, எந்தப் பத்திரிகையில் எந்தத்தேதியில் வெளிவந்த செய்திகள் இவை என்பது குறிப்பிடப்படவில்லை. குடாநாட்டுப் பத்திரிகைகளெதுவும் இவ்வாய்விலிருந்து விலக்கப் படவுமில்லை

" இளைஞர்கள் தலையீட்டால் தீவுப்பகுதியில் ஏற்பட்ட கோஷ்டிமோதல் தவிர்ந்தது " இது ஒரு செய்தித் தலைப்பு. இச் செய்தி வெளிவருவதற்கு இரண்டொரு தினங்களுக்குமுன் தீவுப்பகுதியில் ஒரு கோஷ்டி மோதல் ஏற்பட்டிருந்ததை முந்திய நாளின் தினசரியைப் படித்தவர்கள் அறிந்திருப்பார்கள் அந்தக் கோஷ்டி மோதல் இளைஞர்களின் தலையீட்டினுல் அமைதியடைந்ததென்பதே உண்மைச் செய்தி. ஆனுல், இந்தத் தலைப்பை மட்டும் வாசிக்கும் ஒருவர் " இளைஞர்கள் தலையீட்டினுல் தீவுப்பகுதியில் ஏற்பட்ட கோஷ்டி மோதல் ...... " என்றதும் அந்தக் கோஷ்டி மோதலே இளைஞர்களின் தலையீட்டினுல் தான் ஏற்பட்டது என்று கருத இடமுண்டு.

" சாகும்வரை உண்ணுவிரதம் தொடர்பாக நாளை காலை ஒன்பது மணிக்கு பல்கலைக்கழக மைதானத்தில் கண்டனக் கூட்டம் நடைபெறும் " இந்த வாக்கியம் தரும் தகவல் என்னவென்றுல் ஏதோ ஒரு இடத்தில் நடைபெறும் உண்ணுவிரதத்தைக் கண்டித்துப் பல்கலைக்கழகத்தில் கண்டனக் கூட்டம் நடைபெறவுள்ளது என்பதே. ஆனுல், உண்மை என்னவென்றுல் அந்த உண்ணுவிரதமே பல்கலைக்கழகத்தில் தான் நடைபெறுகிறது. பல்கலைக்கழக மாணவர்கள்தான் அதனை நடத்துகிறுர்கள். உண்ணுவிரதம் எதலைக் கண்டித்து நடைபெறுகின்றதோ அதே விஷயத்தைக் கண்டித்து – அதாவது உண்ணுவிரதத்தை ஆதரித்துத் தான் இக் கூட்டம் நடைபெறுகிறது சொல்ல நினைத்தது எதுவோ, சொல்லி முடித்தது வேறெதுவோ.

அக்கரைப்பற்றில் இளைஞனைச் சுட்டுச் சடலமும் சுமந்தனர் " – சுமத்தல் என்பது வேண்டா வெறுப்பாக, சிரமத்துடன் தூக்கிச் செல்வதனையே பொதுவாகக் குறிக்கும். தமிழனைச் சுட்டு அச் சடலத்தை இன்னொரு தமிழனைக்கொண்டு சுமக்கச் செய்யும் இராணுவ நடவடிக்கை நமக்குப் புதியதல்ல. ஆனுல் இராணுவத்தினர் தமிழனின் சடலத்தைச் சுமக்கவேண்டிய அவசியமெதுவு மில்லையே. ஆகவே, இந்தச் செய்தியின்படி யார் சுட்டது? யாரைச் சுட்டனர்? ...... செய்தியின் விளக்கம் இதுதான் –

இராணுவத்தினர் தமிழ் இளைஞனொருவனைச் சுட்டு அவர்களே சடலத்தையும் கொண்டு போய்விட்டனர் ஆனுல் சுமந்தது அவர்களல்ல, அவர்களது வாகனம் தான்.

" கிளிநொச்சியில் போக்குவரத்துச் சீர்கேடு மோசமடைகிறது " – இது ஒரு செய்தி போக்குவரத்து வசதிகள் குறைந்து நிலைமை மோசமடைதல் போக்குவரத்துச் சீர்கேடு அந்தப் போக்குவரத்துச் சீர்கேடு மோசமடந்தால் ... எதிர்மறை அர்த்தமல்லவா? " நாசமறுந்தது " என்று திட்டுவார்களே, சிலர், அதுபோலத்தான் இதுவும்.

சமையல் வேலே தெரிந்த வீட்டுப் பணிப் பெண் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக் கலாம். இது ஒரு விளம்பரம் பணிப் பெண்ணிலே ஆண், பெண் என இருபாலார் இருப்பது புதினமான ஒன்று. சிறந்த நகைச் சுவை இது.

"கோண்டாவிலில் கண்டெடுக்கப்பட்ட கான்பாக்கை ... — என்பவர் — ... இடம் ஒப்படைத்தார்" இங்கு கான்பாக்கைக் கண்டெடுத்ததாகக் கூறப்படுகிறது. அது என்ன? ஒருவகைப் பாக்கா? நல்லகாலமாக தலைப்பில் "கண்டெடுத்த கைப்பை" என்று போடப்பட்டுள்ளது. எனவே இது "ஹான்ட் பாக்" என்று தெரியவருகிறது. ஆங்கிலச் சொல்லைத் தமிழில் வழங்கவிரும்பினுல் '...' என்ற மேற்கோட்குறியினுள் போடவேண் டும். "எச்" என்ற ஆங்கில எழுத்தின் உச்சரிப்பைத் தரக்கூடிய ஹ என்ற எழுத் தைப் பயன்படுத்தவேண்டும். இல்லேயேல் "கைப்பை" எனத் தமிழில் எழுதலாம்.

"லொறிச் சேவை நிறுத்த
போராட்டம் நியாயமானது"

இத்தலைப்புக் கூறுவது என்ன லொறிச் சேவையை நிறுத்துவதற்குப் போராட்டம் நடத்துவது நியாயமானது என்று சொல் வதாகப் படுகின்றதல்லவா? ஆனுல், செய்தி அதுவல்ல. லொறிச் சேவையை நிறுத்தி லொறி உரிமையாளர்கள் நடத்தும் போ ராட்டம் நியாயமானதுதான் என்று சொல் வதே அந்தத் தலைப்பின் நோக்கம். "லொறிச்சேவை நிறுத்தப்போராட்டம்" என்று குறிப்பிட்டிருந்தால் கருத்துத் தெளி வாகயிருக்கும் இங்கு "ப்" என்ற மெய் யெழுத்தை நீக்கியதாலும் இரண்டு வரி களில் பிரித்துப் போட்டதாலும் இந்தக் கருத்து நேர்ந்தது.

"மட்டுநகர் வீதிகள் வெறிச்சோட் டம்" வெறிச்சோடியிருந்த வீதிகளைக் குறிப் பிட வெறிச்சோட்டம் என்ற புதிய சொற் பிரயோகம். ஆய்வுக்குரியது.

"மின்விநியோகம் காரைநகர் முகாமில் துண்டிக்கப்பட்டது." – காரைநகர்முகாமில் துண்டிக்கப்பட்டது என ஏழாம் வேற்று மையில் சொல்லப்பட்டதால் அங்குள்ள இராணுவத்தினர் இச்செயலை செய்திருக் கலாம் என எண்ணத் தோன்றுகிறது. எனவே, யாருக்குரிய மின்விநியோகம் துண் டிக்கப்பட்டது என்ற கேள்வி எழுகிறது: உண்மையில் காரைநகர் இராணுவ முகா முக்குரிய மின்விநியோகம் இளைஞர்களால் துண்டிக்கப்பட்டது என்பதே செய்தி.

"மக்கள் பாவனைக்குதவாத இறைச் சியை விற்பனைக்கு வைத்தவர் இளைஞர் குழுவின் நடவடிக்கையால் தானே குழி பறித்து அதில் புதைக்கப்பட்ட சம்பவம் உடுவிலில் நிகழ்ந்துள்ளது" இச்செய்தியில் வரும்" ... தானே குழிபறித்து அதில் புதைக்கப்பட்ட ..." என்ற தொடர்மூலம் இறைச்சிக் கடைக்காரர் இளைஞர்களால் புதைக்கப்பட்டுவிட்டார் என்ற கருத்தே மனத்தில் பதிகிறது. ஆனுல் இறைச்சியைத் தான் இளைஞர்கள் இவரைக்கொண்டு புதைப்பித்தனர்.

பத்திரிக்கைச் செய்தியொன்று ஒரு "கொலத்தில்" சுமார் மூன்றங்குலத்திற்கு நீண்டிருந்தது. அரசாங்கவர்த்தமானி உரிய இடத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக் கப்படுவதில்லையென்றும் இதனுல் பலரும் சிரமத்துக்குள்ளாகிறுர்கள் என்றும் இச் செய்தி விஸ்தாரமாக விரிக்கப்பட்டிருந்தது. ஆனுல் இந்நிலை எங்கே என்பது செய்தியில் காணப்படவில்லை. சுன்னுகப் பகுதி நிருபர் செய்தியை அனுப்பியதாக அறியமுடிகிறது. ஆனுல் ஒரு நிருபர் தமது பிரதேசச் செய்தியைத்தான் அனுப்புவார் என்பது நிச்சயமில்லைத்தானே? எனவே இச்செய்தி பூரணத்துவமடையவில்லை.

"யாருடையது?" என்று தலைப்பிட்டு அதன்கீழ் இன்ன இடத்தைச் சேர்ந்த இன்னருடைய அடையாள அட்டை கண் டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து

பெற்றுக்கொள்ளலாம் என்ற அறிவித்தல் களை அடிக்கடி பத்திரிக்கைகளில் காணலாம், அறிவித்தல் சரி. தலைப்புத்தான் சிரிப்பை ஏற்படுத்துகிறது. அடையாள அட்டை இன்னுருடையது என்று அறிவித்தலிலேயே உள்ளது. உதாரணமாக மகேந்திரன் என்பவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டது என்றால் அது மகேந்திரனுடையது என்பது தெரிந்த விஷயம். இங்கு யாருடையது என்ற கேள்வி ஏன்? விபரம் எதுவும் தெரியாத கைப்பை, பணம் முதலிய பொருட்களுக்குத் தலைப்பாக "யாருடையது?" என்று போடலாம். அடையாள அட்டைகளைப் பொறுத்தவரை வேருெரு தலைப்பு தேர்ந்தெடுக்கப்படுவது நல்லது.

இவ்விதமான உதாரணங்கள், பத்திரிகையாளர்கள் மொழியைக் கையாளும் போது எவ்வளவு, கவனமாக இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகின்றன. செய்தியாளர்கள் வெறுமனே தகவல் தருபவர்களாகமட்டும் செயற்படாமல் நமது தாய்மொழியை வளம்படுத்துபவர்களாகவும் இருக்கவேண்டும்.

"கோப்பாய் சிவம்"

பழையமாணவர் சங்கம் யா/ ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரி புத்தூர்

## விசேட நன்கொடைகள் அளித்தோர்

1. சி. முத்துலிங்கம், சிறுப்பிட்டி, மேற்கு நீர்வேலி
2. வை. சிவானந்தராசா, நிமலன்ஸ் போக்குவரத்துச் சேவை, ஆவரங்கால்
3. ஏ. சி. கிருஸ்ணராசா கிராமச்சேவையாளர், உரும்பிராய்
4. வி. சின்னத்துரை ,, ஊரெழு
5. க. வைத்தியநாதன் ,, புத்தூர் கிழக்கு புத்தூர்
6. ஏ. சி. துரைசிங்கம் ,, ஆவரங்கால்
7. பி. என். செல்லத்துரை ,, புத்தூர் மேற்கு
8. இ. கணேசலிங்கம் ,, அச்சுவேலி
9. எம். கருணநாதன் ,, கோப்பாய்
10. ஏ. குலேந்திரநாயகம் ,, நீர்வேலி
11. பெ. மாணிக்கவாசகர் ,, கரவெட்டி
12. க. ச. சோமசுந்தரம இளைப்பாறிய கிராமச்சேவையாளர், ஆவரங்கால்
13. க. இராசதுரை கிராமசேவையாளர், மயிலிட்டி
14. ச. க. ஆறுமுகம் இடைக்காடு
15. க. வேலுப்பிள்ளை பத்தமேனி
16. கு. செல்லராசா பத்தமேனி
17. சி. நல்லதம்பி இடைக்காடு
18. நா. சுவாமிநாதன் இடைக்காடு
19. ரி. இரத்தினசபாபதி ஐயர் இடைக்காடு
20. சோ. தணிகாசலம் இடைக்காடு
21. சி. நா. சுப்பிரமணியம் சல்லிக்கட்டு, இடைக்காடு
22. ஆ. கந்தசாமி இடைக்காடு
23. க. சிதம்பரப்பிள்ளை இடைக்காடு
24. சு. விக்கினேஸ்வரன் ஆவரங்கால்

# "எழுத்தறி வித்தவன்....."

"அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்

அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோரேழைக்கு எழுத்தறிவித்தல்"

என்பது பாரதியார் வாக்கு இம்மூவகை அறநிலையங்களையும் முறையே நிறுவி; அவை ஒழுங்குற நிகழ்தற்கு வேண்டிய நிபந்தனைகளுமமைத்துக் கோடி புண்ணியமும் குன்றாப் புகழும் பெற்றவர்கள் சிற்றம்பலம் மழவராயரும் அவர் மைந்தரான பெருங் கொடை வள்ளல் மழவ கந்தையாவுமே ஆவார். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்க்கு எடுத்துக்காட்டாய் நின்று திகழ்பவர் இப்பெரியார்களாவார்

புத்தூர் பிரதேசத்தின் மத்தியிலமைந்த புத்தூர் சிவன்கோவிலைக் கட்டி அதன் இயக்கத்திற்கு வழிவகுத்தவர் சிற்றம்பலம் மழவராயர். புத்தூர் மேற்கில் தான் வசித்த இல்லத்தை அன்னசத்திரமாக்கி ஏழைகட்கும் வழிப்போக்கர்கட்கும் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்தவர் அவர், மகன் கந்தையாவேள் ஆவார். நல்லூரின் மேற்கு வீதியில் இன்று திருஞானசம்பந்தர் ஆதீனமமைந்துள்ள காணியும் கட்டிடமும் தர்மசாசன நன்கொடை செய்தவரும் மழவராயர் கந்தையாவேளே ஆவார். இன்னும் கதிர்காமம், செல்வச்சந்நதி, திருக்கேதீஸ்வரம் போன்ற பலஇடங்களில் மடங்களும் அன்னதான ஒழுங்குகளும் அவராற் செய்யப்பட்டன.

